# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 408

சனி, 12 செப்டெம்பர், 2026 | பக்கங்கள் 16

www.ilakku.org














# வரும் எல் நினோ தாக்கம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு தீவிரமாகலாம்!



1950ஆம் ஆண்டு முதல் பதிவுசெய்யப்பட்ட 28 எல் நினோ நிகழ்வுகளுடன் ஒப்பிடுகையில், தற்போது உருவாகி வரும் எல் நினோ நிகழ்வு இதுவரை பதிவானவற்றைவிட அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என வானிலை ஆய்வுத் திணைக்களம் எச்சரித்துள்ளது. நேற்று (11) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் விஜேமன்ன கூறுகையில், எல் நினோ உருவாகும் சாத்தியம் 69 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார். கடந்த 75 ஆண்டுகளில் பதிவான எந்தவொரு எல் நினோ நிகழ்வையும் விட இது வலுவானதாக இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பசிபிக் பெருங்கடலில் உருவாகும் இந்த நிகழ்வு, இலங்கையின் வானிலை நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும். குறிப்பாக, எதிர்வரும் அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நாடு முழுவதும் இயல்பைவிட அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த இரண்டு வாரங்களில் மழை ஓரளவு குறைந்தாலும், செப்டெம்பர் இறுதியிலிருந்து அது படிப்படியாக அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் முதல் டிசம்பர் வரை வலுவான எல் நினோ உருவாகும் சாத்தியம் 98 சதவீதம் எனவும் கூறப்பட்டுள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 14

## இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கியா அகதிகளுக்கு சர்வதேச அணுகல் வேண்டும்!

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கியா அகதிகளை ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் ஊடகவியலாளர்கள் சந்திப்பதற்கு அனுமதிக்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உரையாற்றிய ரோஹிங்கியா பிரதிநிதி மொஹமட் அன்வர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 63ஆவது அமர்வு 2026 செப்டெம்பர் 7ஆம் திகதி பிற்பகல் ஜெனீவாவில் ஆரம்பமானது. இதன்போது உரையாற்றிய மொஹமட் அன்வர், இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கியா அகதிகளின் நிலைமை தொடர்பில் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்குமாறு கோரிக்கை விடுத்தார்.

“2024 டிசம்பரில், 57 சிறுவர்கள் உட்பட சுமார் 116 ரோஹிங்கியா மக்கள் ஆபத்தான கடல் பயணத்திற்குப் பின்னர் இலங்கைக்கு வந்தனர். இதன்போது, இரண்டு படகுகள்

தொடர்ச்சி: பக்கம் 14

## மாகாண சபைத் தேர்தல் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேறிய எதிர்க்கட்சி

மாகாண சபைத் தேர்தலை எந்தத் தேர்தல் முறையின் கீழ் நடத்துவது என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கையளிப்பதற்காக நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேற எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

குறித்த தெரிவுக்குழுவின் கால எல்லையை எதிர்வரும் டிசம்பர் மாதம் 17ஆம் திகதி வரை நீடிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இன்று (11) பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ, இத்தெரிவுக்குழுவிற்கு மேலும் கால அவகாசம் தேவைப்படுவதால், அதன் கால எல்லை டிசம்பர் மாதம் 17ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இதற்கு தனது எதிர்ப்பை வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, இத்தெரிவுக்குழு கூடி தற்போது ஒன்பது

தொடர்ச்சி: பக்கம் 14

# பத்து ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு மனிதகுலத்தை அழித்துவிடும்




மனிதக் கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் சக்திவாய்ந்த அமைப்புகள் குறித்த கவலைகள் அதிகரித்து வரும் நிலையில், அடுத்த பத்து ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு மனிதகுலத்தை முற்றிலுமாக அழித்துவிட 10%க்கும் அதிகமான வாய்ப்புள்ளது என்று ஆந்த்ரோபிக் நிறுவனத்தின் மூத்த ஆராய்ச்சியாளர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்கள், தங்களால் கட்டுப்படுத்த முடியாத அமைப்புகளை நோக்கி வேகமாகச் செல்கின்றன என்ற அச்சத்தின் காரணமாக, சக ஆந்த்ரோபிக் ஆராய்ச்சியாளரான ஜேக்கப் காக்சன் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு அமைப்புகளை மனித நலன்களுடன் ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இவான் ஹூபிங்கர் இந்த மதிப்பீட்டை வெளியிட்டார்.

“செயற்கை நுண்ணறிவு அனைத்து மனிதர்களையும் கொன்றுவிடும் என்று நாங்கள் உண்மையாகவே நம்புகிறோம்,” என்று ஹூபிங்கர் புதன்கிழமை(9) அன்று X தளத்தில் எழுதினார். “அடுத்த பத்தாண்டுகளுக்குள் இது 10%க்கும் அதிகமாக இருக்கும் என்று நான் தனிப்பட்ட முறையில் நினைக்கிறேன்.” ஆந்த்ரோபிக் நிறுவனம் “தன்னால் முடிந்தவரை முயற்சி செய்து வருகிறது” என்றும், ஆனால் மீநுண்ணறிவைப் பாதுகாப்பாகக் கட்டுப்படுத்துவதற்கான திட்டம் இன்னும் தங்களிடம் இல்லை என்றும், அத்தகைய திட்டத்தைக் கண்டறியும்

தொடர்ச்சி: பக்கம் 14

## அமெரிக்காவின் மிக நவீன நீர்மூழ்கிக் கப்பலை கைப்பற்றிய ஈரான்



அமெரிக்க இராணுவத்தின் வசம் இருந்த “மிகவும் நவீனமான, ஆளில்லா மற்றும் திறன்மிகு நீர்மூழ்கிக் கப்பல்களில் ஒன்றைக்” கைப்பற்றியதாக ஈரானின் இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் படை (IRGC) அறிவித்துள்ளது. இது எந்தவொரு முக்கிய உபகரணங்களும் இல்லாத ஒரு பழைய ட்ரோன் என்று கூறி, பென்டகன் இந்தச் சம்பவத்தின் தீவிரத்தைக் குறைத்துக் காட்டியது.

செவ்வாயன்று, IRGC ஒரு காணொளியை வெளியிட்டது. அது, கடலடி வரைபடம் வரைவது முதல் உளவு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள், குழாய்வழி ஆய்வு, மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புப் போர் ஆதரவு வரை பலதரப்பட்ட பணிகளைச் செய்யக்கூடிய, மேம்பட்ட அமெரிக்கக் கடலடி ட்ரோன் என்று அது கூறியது.

அந்தக் காணொளியில், சுமார் 5.8 மீட்டர் நீளமும் 1.2 மீட்டர் அகலமும் கொண்ட, சுமார் 2.7 டன் எடையுள்ள, சாம்பல் நிற, உலோகத்தால் ஆன, டார்பிடோ போன்ற உருளை வடிவக் கப்பல் ஒன்று காணப்படுகிறது. IRGC அறிக்கையின்படி, இந்தக் கடலடி கப்பல் 10 நாட்கள் வரை நீருக்கடியில் இருக்க முடியும் மற்றும் அதிகபட்சமாக 6,000 மீட்டர் ஆழத்தை அடைய முடியும்.

அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்ததாரரான அன்டுரில் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு, ஏப்ரல் 2025-ல் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட டைவ்-எல்டி ட்ரோன் இது என ஈரானிய இராணுவம் அடையாளம் கண்டுள்ளது.

அமெரிக்க மத்திய கட்டளைப் பிரிவு (சென்ட்காம்), எந்தவொரு ரகசிய உபகரணங்களையும் கொண்டிராத, பழுதடைந்த பழைய மாடல் ட்ரோனை ஈரான் பெற்றதாகக் கூறி, இந்தச் சம்பவத்தின் தீவிரத்தைக் குறைக்க முயன்றது.

அந்த நீர்மூழ்கிக் கப்பல் பிராந்திய கடல் பகுதிகளைக் கண்காணித்து வந்தது

தொடர்ச்சி: பக்கம் 08

## தேர்தலை முன்னிட்டு ஒவ்வொரு வாக்காளருக்கும் 5,000 டொலர்கள் – ட்ரம்ப் அறிவிப்பு



நவம்பரில் நடைபெறவுள்ள இடைக் காலத் தேர்தல்களில் குடியரசுக் கட்சியினர் நாடாளுமன்றத்தின் (காங்கிரஸ்) இரு அவைகளிலும் தங்கள் கட்டுப்பாட்டைத் தக்கவைத்துக் கொண்டால், ஒவ்வொரு வயது வந்த அமெரிக்கருக்கும் 5,000 டாலர் “பங்கீடுத் தொகை” (dividend) வழங்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் உறுதியளித்துள் ளார்.

டல்லாஸில் புதன்கிழமை(9) நடைபெற்ற குடியரசுக் கட்சியின் முதல் இடைக் கால மாநாட்டில் பேசிய டிரம்ப், அமெரிக்கப் பொருளாதாரம் மற்றும் தனது வரிக் கொள்கைகள் (tariffs) மூலம் ஈட்டப்படும் வருவாய் ஆகியவை குடிமக்களுக்கு நேரடியாகப் பணம் வழங்க அரசாங்கத்தை அனுமதிக்கும் என்று வாதிட்டார்.

“குடியரசுக் கட்சியினர் வெற்றி பெற்றால், நீங்களும் எங்களுடன் வெற்றி

தொடர்ச்சி: பக்கம் 05

## பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் இந்தியாவின் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின




புது தில்லியில் உள்ள பாரத் மண்டபம் கண்காட்சி வளாகத்தில், 130க்கும் மேற்பட்ட ரஷ்ய மற்றும் இந்திய நிறுவனங்களை ஒன்றிணைக்கும் ‘இன் னோப்ரோம் இந்தியா’ (INNOPROM) சர்வதேச தொழில் வர்த்தகக் கண்காட்சி யின் முதல் பதிப்பு செப்டம்பர் 9 அன்று தொடங்கியுள்ளது.
18-வது பிரிக்ஸ் (BRICS) உச்சிமாநாட்டிற்கு முன்னதாக, கண்காட்சி வளாகத்தின் முதல் அரங்கில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. இது ரஷ்யாவின் தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகம் மற்றும் இந்தியாவின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ரஷ்ய தரப்பில் ‘ஃபார்மிகா ஈவென்ட் எல்எல்சி’ (Formika Event LLC) நிறுவனமும், இந்திய தரப்பில் ‘இந்தியத் தொழில்துறை கூட்டமைப்பு’ (CII) அமைப்பும் இதன் செயல்பாட்டு ஒருங்கிணைப்பாளர்களாக உள்ளன.

ரஷ்ய மற்றும் இந்திய தேசியப் பிரிவுகளுக்குச் சமமான கண்காட்சி இடம் ஒதுக்கப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். ரஷ்யப் பிரிவில் ரோஸ்டெக் (Rostec), ரோசாட்டம் (Rosatom), ரோஸ்கோஸ்மோஸ் (Roscosmos), யுனைடெட் ஏர்கிராஃப்ட்

தொடர்ச்சி: பக்கம் 14

## மன்னார் அபிவிருத்தித் திட்டங்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அவசியம்: கத்தோலிக்க ஆயர் மன்றம் வலியுறுத்தல்



இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம், கடந்த ஆகஸ்ட் 18 முதல் 20ஆம் திகதி வரை நடைபெற்ற தனது முழுமையான அமர்வின்போது, நாட்டின் நீதி, அமைதி மற்றும் நல்லிணக்கத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் பல முக்கிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தியுள்ளது.

இதன்போது, மன்னாரில் முன்மொழியப்பட்டுள்ள காற்றாலை மின் நிலையங்கள் தொடர்பாகவும் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மன்னாரில் ஏற்கனவே 14 காற்றாலை கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ள நிலையில், வழங்கப்பட்ட வாக்குறுதியின் அடிப்படையில் இதுபோன்ற மின் நிலையங்களை மேலும் விரிவுபடுத்தக் கூடாது என ஆயர் மன்றம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துள்ள ஆயர் மன்றம், இந்தக் கோரிக்கை கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கும் இந்தத் தொழிலாளர் சமூகத்தினருக்கான சம்பள உயர்வு நீண்டகாலத் தேவையாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பாக நடுநிலையான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் ஆயர் மன்றம் வலியுறுத்தியுள்ளது. நீண்டுகொண்டிருக்கும் செம்மணி அகழ்வுப் பணிகள் விரைவாக நிறைவுசெய்யப்பட்டு, அதனுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பான உண்மையும் பொறுப்புக்கூறலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது.

மேலும், சுமார் 30 ஆண்டுகளாக நீடித்த உள்நாட்டுப் போரின் போது இடம்பெற்ற பயங்கரவாதச் செயல்கள் மற்றும் கொலைகள் தொடர்பான சம்பவங்கள் குறித்தும் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என ஆயர் மன்றம் குறிப்பிட்டுள்ளது.

மன்னார்தீவில் இடம்பெறும் மணல் அகழ்வு நடவடிக்கைகள் பாரிய சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துவது குறித்தும் கவலை வெளியிட்டுள்ள ஆயர் மன்றம், எண்ணெய் மற்றும் எரிபொருள் ஆய்வுகளுக்காக மன்னார் தீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் துளையிடுவது தொடர்பான தகவல்களும் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

எனவே, இத்தகைய அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னர் முறையான சுற்றுச்சூழல் மதிப்பீடுகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட வேண்டும். உள்ளூர் மக்களின் கருத்துகளை அறியும் வகையில் முறையான கலந்தாய்வுகள் நடத்தப்படுவதுடன், மன்னார் மீனவ சமூகத்தின் வாழ்வாதாரமும் நீர்வளங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் ஆயர் மன்றம் வலியுறுத்தியுள்ளது.

## ஈரானியக் கப்பல் பணியாளர்களை மாற்ற இலங்கை இணக்கம்



இலங்கை கடற்பரப்பில் உள்ள ஈரானியக் கப்பலின் மூன்று பணியாளர்களை மாற்றுவதற்கான ஈரான் அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இந்த விவகாரம் இராஜதந்திர மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் மூலம் கையாளப்படும் என்றும் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஈரானியக் கப்பலின் மூன்று பணியாளர்களை மாற்றுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்க வேண்டும் என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவூஃப் ஹக்கீம் விடுத்த கோரிக்கைக்குப் பதிலளிக்கும்போதே பிரதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

## ஆசிரியர் தலையங்கம் | 12 செப்டெம்பர், 2026

## இறைமையை மீளுறுதிப்படுத்த தொழில்நுட்பத் தேசியவாதப் பேரவைகள் – காலத்தின் தேவை

ஒரு நாட்டினுடைய தொழில்நுட்பத்தை புத்தாக்கம் செய்தல், தொழில்நுட்ப செயல்திறன், நாட்டின் தன்னிறைவுத்தன்மை என்பனவற்றை நேரடியாகவே நாட்டின் தேசிய பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி சமுக உறுதிப்பாடு என்பவற்றுடன் இணைத்து தொழில் நுட்பத் தேசிய வாதம் உருவாக்கப்படுகிறது.

இன்றைய உலக அரசாங்கங்கள் தொழில்நுட்பத்தை வெறுமனே வர்த்தக வளரச்சிக் கானதாக நடுநிலைத்தன்மையுடன் பார்க்காது உலக அரசியல் சக்தியுள் இணைவதற்கும் நாட்டின் தேசிய எதிர்ப்பாற்றலை பலப்படுத்துவதற்குமான முக்கிய கருவியாகப் பார்க்கின்றன.

இதற்கேற்ப எந்த நாட்டு அரசுடனும் அந்த அரசில் தொழில்நுட்பத் தேசியவாத வளர்ச்சியை ஏற்படுத்தி பலமான அரசாங்கமாக மாற்றுதல் என்ற உத்தி வழியாகவே உலகின் வல்லரசுக்களும் பிராந்திய மேலாண்மைகளும் தங்கள் நாளாந்தத் தொடர்புகளை ஏற்படுத்தும் காலமாக இன்றைய காலம் காணப்படுகிறது.

இதற்கு இசையாத நாடுகள் மேல் பொருளாதார தடைகள் கடும் வரி விதிப்புக்கள் ஆட்சி மாற்றங்களுக்கு உதவுதல் இவற்றாலும் தாம் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்றால் மறைமுகமான அல்லது நேரடியான போர் மூலம் தமது நோக்குகளை அடைதல் என்பதே இன்றைய உலகின் சமகால நோக்காவும் போக்காகவும் உள்ளது.

இந்நிலையினை ஈழத்தமிழ்த் தேசியத்தவர்களான ஈழத்தமிழர்கள் எவ்வாறு எதிர்கொள்வது? என்பதனை ஈழத்தமிழ் தேசியத்தவர்களாக உலகஇனமாக உலகின் முக்கிய நாடுகளில் புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டிய பொறுப்பு உள்ளவர்களாக உள்ளனர் என்பது இலக்கின் கருத்தாகவுள்ளது.

இந்நிலையில் ஈழத்தமிழ்த்தேசியத்தவர்கள் தமக்கான தொழில்நுட்பத் தேசியவாதத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பினை அவர்களுடைய உலகளாவிய வாழ்வு உருவாக்கித் தருகிறது. இந்த உலகெங்கும் உள்ள ஈழத்தமிழ்த் தேசியத்தவர்களின் தொழில்நுட்பத் தேசியவாதப்பலம் தாயக மக்களின் நாளாந்த வாழ்வுடன் ஒருங்கிணைக்கப்பட்டால் தொழில்நுட்ப தேசியவாதத்தில் ஈழத்தமிழர்கள் தங்கள் நிலையை தக்கவைத்துக் கொள்ள முடியும் என்பது இலக்கின் எண்ணம். இதற்கு ஈழத்தமிழர் தொழில்நுட்பத் தேசிய வாத ஒருங்கிணைப்பு பேரவையை அரசியல் வேறுபாடுகளைக் கடந்து உருவாக்கல் என்பது காலத்தின் தேவையாகிறது என இலக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

இந்தத் தொழில்நுட்பத் தேசியவாதப் பேரவையில் உலகெங்குமுள்ள ஈழத்தமிழ்த் தேசியத்து மாணவர்கள், ஆசிரியர்கள், துறைசார் பட்டதாரிகள், உழைக்கும் வயதில் வாழ்பவர்கள், வர்த்தகர்கள், பெண் ஆளுமைகள், மூத்தகுடியினர் இந்த 7 வகையினரும் தனித்தனியான தொழில்நுட்பச் சமுகங்களாக கட்டமைக்கப்பட்டு அவர்களின் அறிவு ஆற்றல் உழைப்புத்திறன் மூலதனம் தொகுத்து வகைப்படுத்தப்பட வேண்டும். இந்த ஒவ்வொரு தொழில்நுட்ப தேசியவாத சமுகத்தவர்களும் அவர்களுடைய அறிவை ஆற்றலை உழைப்புத் திறனை மூலதனத்தை தாயகத்தில் உள்ள அதே வகையினருடன் பகிர்ந்து ஈழத்தமிழர்களின் தொழில்நுட்பத் தேசியவாதத்தை கட்டியெழுப்புகையில் இது ஈழத்தமிழர் தாயகத் தேசநிர்மாணமாக பெருவளர்ச்சி பெறும் என்பது இலக்கின் எண்ணம்.

இந்த தொழில்நுட்பத் தேசியவாதத்தை குறித்த சிந்தனையை இவ்வாரத்தில் முன்வைப்பதற்குக் காரணம் ஆசிய ஆபிரிக்க நாடுகளின் அரசுக்களின் தொழில்நுட்பத் தேசிய வாதத் தேவையைப் பூர்த்தி செய்யும் பலம் பொருந்திய கட்டமைப்பாகத் திகழும் பிரிக்ஸ் அமைப்பின் 18 வது மாநாடு இவ்வாரத்தில் 12ம் 13 ம் திகதிகளில் இந்தியாவில் டில்லியில் பாரத் மண்டபத்தில் இந்தியா 4வது தடவையாக பிரிக்ஸ் கட்டமைப்பிற்கு தலைமை வகிக்கும் நிலையில் இடம்பெற்றமையே ஆகும். இவ்வாரத்தின் உலகின் முக்கிய அரசியல் பொருளாதார தொழில் நுட்ப நிகழ்வாக இது அமைகிறது.

20 ஆண்டுகளுக்கு முன்பு பிரேசில் ரஸ்யா இந்தியா சீனா என்னும் நான்கு நாடுகளை கொண்ட அமைப்பாக மேற்குலக நாடுகளின் பொருளாதார மேலாண்மையைக் குறைத்து வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிடை வர்த்தகம் பொருளாதாரம் நிதி சார்ந்த ஒத்துழைப்பை வளர்க்க உருவானது பிரிக் (BRIC) இவ் அமைப்பு தொடங்கிய நாலாம் ஆண்டில் தென்னாபிரிக்கா இணைந்த பொழுது பிரிக்ஸ் (BRICS) எனப் பெயர் மாற்றம் பெற்றது. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு 2017 இல் சீனா தலைமைப் பொறுப்பில் இருந்த பொழுது பிரிக்ஸ் பிளஸ் என உறுப்பினர் விரிவாக்கத்துக்கு அனுமதியளிக்கப்பட்டதனால் 2024 இல் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எகிப்து, எத்தியோப்பியா, ஈரான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சவூதி அரேபியாவும் 2025 இல் இந்தோனேசியாவும் முழு உறுப்பினராக இணைந்து 11 நாடுகள் பிரிக்ஸின் முழுஅளவான உத்தியோக பூர்வமான முழுஅளவு உறுப்பினராகவுள்ள அமைப்பாக பிரிக்ஸ் பிளஸ் வளர்ச்சி கண்டது. தொடர்ந்து உத்தியோக உறுப்பு நாடாக இல்லாத பத்து நாடுகளான பெலாரஸ், பொலிவியா,கியூபா,கசகஸ்தான், மலேசியா நைஜிரியா தாய்லாந்து உகண்டா உஸ்பெக்கிஸ்தான் வியட்னாம் என்பன அவற்றின் உயர் ராஜதந்திரிகள் வர்த்தகப் பிரதிநிதிகள் உத்தியோக பூர்வ பங்காண்மை நாடுகளாக பிரிக்ஸ் மாநாட்டில் கலந்து கொள்கின்றன. பாக்கிஸ்தான் பங்களாதேஸ் துருக்கி போன்ற நாடுகள் உட்பட பல நாடுகள் பிரிக்ஸ் இல் முழுஅளவான உறுப்பினராக உறுப்புரிமை பெற முயற்சிக்கின்றன. சிறிலங்காவும் தனது விருப்பை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இன்று உலகின் மிகப்பெரிய கச்சாய் எண்ணெய் உற்பத்தியாளர்களும் நுகர்வோரும் உள்ள அமைப்பாகத் திகழும் பிரிக்ஸ் பிளஸ் 1970கள் முதல் அமெரிக்காவால் பெட்ரோ டொலர் என்னும் அளவுக்கு டொலரில் கச்சாய் எண்ணெயின் விலை மதிப்பு செய்யப்பட்டு வரும் நிலையையும் மேற்குலக நாடுகள் சுவிஃற் (SWIFT) நிதிப்பரிவர்த்தனையால் கச்சாய் எண்ணெய் விலையில் தாக்கத்தை ஏற்படுத்துவதையும் குறைக்க சீனாவின் யுவான் இந்தியாவின் ரூபாய் அரபு எமிரேட்ஸின் திர்ஹாம் மூலம் எண்ணெய் வர்த்தகம் செய்தல், டிஜிட்டல் நாணயங்கள் ( CBDCs) மற்றும் பிரிக்ஸ் பே மூலம் நாடுகளிடை நேரடி நிதி பரிவர்த்தனை செய்தல் சந்தை விலை தளம்பலை குறைக்க உறுப்பு நாடுகளிடை குறைந்ததும் நிலையானதுமான விலை நிர்ணயத்தில் நீண்டகால எண்ணெய் வழங்கல் ஒப்பந்தங்களை செய்தல் என்பன பிரிக்ஸ் பிளஸ் நாடுகளிடை முயற்சிக்கப்பட்டு வருகிறது. இதனால் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் பலத்த பொருளாதாரப் பாதிப்புக்களுக்கு உள்ளாகுவதற்கு வாய்ப்புக்கள் உள. கூடவே இந்தியா சீனா பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறும். அத்துடன் இந்த இந்திய உச்சி மாநாட்டில் பிரிக்ஸ் நாடுகள் தங்களுக்குள் ஒரு புதிய ஆற்றல் பாதுகாப்பு நெட்வேர்க் அமைப்பது நடைமுறையானால் 21ம் நூற்றாண்டின் உலகப் பொருளாதாரம் டொலரில் தங்காத நிலை தோன்றும். இதுவே இன்றைய அமெரிக்காவை மீளவும் பெரிய அமெரிக்காவாக மாற்றுவதற்கான ட்ரம்பின் முயற்சிகளுக்கு மூலகாரணமாகவுள்ளது.

இந்தச் சூழலில் 2022 இல் ரஸ்ய உக்ரேன் போர் தொடங்கிய பின்னர் ரஸ்ய அதிபர் கலந்து கொள்ளும் முதலாவது மாநாடாகவும் ஈரானின் பிரதமர் அமெரிக்க இஸ்ரேல் கூட்டு ஆக்கிரமிப்பு போருக்கு மத்தியிலும் கலந்து கொள்ளும் மாநாடாகவும் சீன அதிபர் இந்தியாவுக்கு வருகை தந்து கலந்து கொள்ளும் மாநாடாகவும் அரசியல் முக்கியத்துவம் பெறும் இம்மாநாட்டின் பாதுகாப்புக் கருதி டில்லியின் மேலான வான்வெளியை இந்தியா தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த நிலையில் இம்மாநாடு இடம்பெறுகிறது. இது இந்தியாவின் படைத்துறையின் வான்வெளி வலிமையையும் இந்தியா வல்லரசு நாடாக வேகமாக வளர்ச்சியுற்று வருவதையும் உணர்த்துகிறது என்ற அரசியல் திறனாய்வுகள் எழுந்துள்ளன.


இப்புதிய உலக அரசியல் ஒழுங்குமுறை பழைய உலக அரசியல் ஒழுங்குமுறை மாதிரி இல்லாது நாடுகளின் இறைமையை கூட்டு இறைமையாக மாற்றுகின்ற தன்மை கொண்டதாக வளர்ச்சி பெறுவதால் தேசஅரசுக்கள் என்ற நிலை இனி அரசக் கூட்டாண்மை கட்டங்கள் என்ற தாக மாறும். இந்நிலை மொழித்தேசியம், இனத்தேசியம், மதத்தேசியம், நிறத்தேசியம் என்பவற்றைக் கடந்து கட்டங்களின் தொழில்நுட்பத் தேசியம் என்பதாக பரிணாமடைந்த அரசியல் உலகையே தோற்றுவிக்கும். இந்த தொழில்நுட்பத் தேசியத்தின் பலத்திலேயே மக்களின் இறைமை தீர்மானிக்கப்படும். இன்று 1997 முதல் 2010 வரை பிறந்தவர்களாக 16 முதல் 29 வரை வயதுடைய ஜென்சீ பரம்பரையுடையது சமகாலம். இவர்கள் தொழில்நுட்பத் தேசியவாதத்திலேயே தங்கள் இறைமையின் இருப்பை தீர்மானிக்க வேண்டியவர்களாவார்கள். இதனால்தான் எல் நினோ தாக்கத்தால் தடுமாறுகிற உலகம் காலநிலைச்சீர்கேட்டை எதிர்கொள்வதற்கு ஏற்ப ஒவ்வொருநாட்டிலும் இடர்முகாமைத்துவத்தை திட்ட மிடத் தொடங்கியுள்ளது போல இந்தத் தொழில்நுட்பத் தேசியவாதத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளவும் ஒவ்வொரு நாடும் மட்டுமல்ல ஒவ்வொரு மக்கள் இனமும் குறிப்பாக ஈழத்தமிழர்கள் போன்ற சிறுதேச இனங்கள் தங்களுக்கான தொழில்நுட்பத் தேசிய வாதப் பேரவைகளை அமைத்து செயற்பட்டாலே மக்களின் இறைமை அழிக்கப்படாது பாதுகாக்கப்படலாம் என்பதே இலக்கின் கருத்து

**ஆசிரியர்**




விதுரன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 63ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கை மற்றும் அதைத் தொடர்ந்து வெளிவந்துள்ள எதிர்வினைகள், போருக்குப் பின்னரான இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல் தொடர்பான பிற்போக்கு நிலைமையை மீண்டு மொருமுறை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் உலக அரங்கில் அம்பலப்படுத்தியுள்ளது.




சர்வதேச மனித உரிமைகள் கொள்கைகள், தேசிய அரசியல் யதார்த்தங்கள், பாதிக்கப்பட்ட சமூகங்களின் நீதிக்கான ஏக்கம் ஆகியவற்றுக்கு இடையிலான முரண்பாடுகளை இந்த அறிக்கை கொண்டிருந்தாலும், இலங்கையின் தேசியப் பிரச்சினைகளுக்கான அடிப்படையை அடியோடு கைவிட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் எழுத்துமூல அறிக்கையை வாசித்த பிரதி உயர்ஸ்தானிகர் அவா டபோ, இலங்கையின் பொறுப்புக் கூறல் செயன்முறையில் நிலவும் தேக்கநிலையைச் சுட்டிக்காட்டியதோடு, புதிய அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளுக்கும் களத்தில் காணப்படும் உண்மை நிலவரங்களுக்கும் இடையிலான இடைவெளியை அம்பலப்படுத்தியுள்ளார்.

அதேநேரம், சர்வதேச அழுத்தங்களை வழக்கம் போல நிராகரிக்கும் இலங்கை அரசாங்கத்தின் அணுகுமுறையானது, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நம்பிக்கையை மீண்டும் கேள்விக்குறியாக்கியுள்ளது.



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் அவா டபோ சமர்ப்பித்த அறிக்கையில், சர்வதேச மட்டத்தில் அதிகரித்துவரும் ஆயுத மோதல்கள் மற்றும் சர்வதேச சட்டங்கள் மீறப்படுவது குறித்து எச்சரிக்கப்பட்ட போதிலும், இலங்கை விவகாரத்தில் நிலவும் மந்தகதியே பிரதானமாக அவதானிக்கப்பட்டது.

இலங்கையில் புதிய அரசாங்கம் ஆட்சிப்பீடமேறியபோது நல்லிணக்கத்தையும் நீதியையும் நிலைநாட்டுவதற்கு வலுவான மக்களாணை கிடைத்ததாகச் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், 2009ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட ஆயுத மோதலின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரச படையினரோ அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளோ இன்னமும் பொறுப்புக்கூற வைக்கப்படவில்லை என்பது அழுத்தமாகக் கூறப்பட்டுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் தியாகராஜா ரவீந்திரநாத் படுகொலை தொடர்பான விசாரணைகள் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளில் எட்டப்பட்ட சில கைதுகள் நேர்மறையான நகர்வுகளாக அடையாளப்படுத்தப்பட்டாலும், ஒட்டுமொத்தக் குற்றவியல் விசாரணைகள் தொடர்ந்து தாமதமடைந்து வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உள்நாட்டில் பாதிக்கப்பட்ட தரப்பு முழுமையாக எதிர்க்கும் 'சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகம்' ஸ்தாபிக்கப்படாமை, பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்தும் பிரயோகிக்கப்படுகின்றமை, வடக்கு, கிழக்கில் சிவில் செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மீதான கண்காணிப்புகள் தொடர்வது ஆகியவை இலங்கையின் ஜனநாயக வெளியை இன்னமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கியுள்ளன.




காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையீனம், கண்டறியப்படும் மனிதப்புதைகுழிகள், வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நேர்ந்தது என்ற கேள்விகளுக்குப் பதிலின்மை என்பன, இலங்கை அரசு உள்நாட்டுப் பொறிமுறைகளில் எந்தளவுக்குத் தோற்றுப்போயுள்ளது என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

இதற்குப் பதிலாக, ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60-1 தீர்மானத்தின் கீழ் இயங்கும் 'இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தை' இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரிப்பதாக அறிவித்துள்ளது. ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சுமித் திசாநாயக்க உரை நிகழ்த்துகையில், இத்தகைய வெளியகப் பொறிமுறைகள் நாட்டில் இனத்துருவமயப்படுத்தலையும் பிளவுகளையும் ஏற்படுத்தும் என்று வாதிட்டுள்ளார்.

உள்நாட்டுப் பொறிமுறைக்கே தாம் முன்னுரிமை அளிப்பதாகக் கூறும் அரசாங்கம், நடைமுறையில் எந்தவொரு நம்பகமான உள்ளக விசாரணையையும் முன்னெடுக்கத் தவறியுள்ளது என்பதே கசப்பான உண்மையாகும்.

கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க மற்றும் தற்போதைய அநுரகுமார திசாநாயக்க தலைமைகள் வரை, ஜெனிவா தீர்மானங்களை நிராகரிப்பது அல்லது ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தாமல் தவிர்ப்பது என்ற விடயத்தில் ஒரே மாதிரியான தந்திரோபாயத்தையே பின்பற்றி வருகின்றனர்.

அத்தகைய அரசியல் சூதாட்டங்களின் மத்தியில், சர்வதேசப் பொறிமுறைகளின் மூலமாக மட்டுமே தமக்கு நீதி கிடைக்கும் என்ற பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் தீவிரமான நம்பிக்கை மீண்டும் ஒருமுறை சிதைக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா தலைமையிலான இணையனுசரணை நாடுகளும் முக்கிய வழக்கு விசாரணைகளில் முன்னேற்றம் இல்லாததைக் கண்டித்து, தனது கடப்பாடுகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்தியுள்ளன. இருப்பினும், வெளியகப் பொறிமுறை எதுவுமின்றி, வெறும் தேசியப் பொறிமுறைகளை மட்டும் சர்வதேச சமூகம் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்க வேண்டும் என்ற இலங்கையின் எதிர்பார்ப்பு, நீதிக்கான அனைத்து வழிகளையும் மூடுவதாகவே உள்ளது.



இதனிடையே, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா போன்ற இராணுவ உயரதிகாரிகள் சர்வதேச ஊடகங்களில் தோன்றி, தாம் போர்க் குற்றவாளி அல்ல என்று வாதாடுவதும், போரின்போது பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம், ஆனால் அவர்கள் இலக்கு வைக்கப்படவில்லை எனக் கூறுவதும், இலங்கை இராணுவத் தலைமையின் பொறுப்புக்கூறலற்ற மனப்போக்கையே வெளிப்படுத்துகிறது.

அமெரிக்க நீதிமன்றத்தில் தனக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்கில், தான் குற்றமற்றவர் என நிரூபிப்பதைத் தவிர்த்து, இராஜதந்திர விலக்குரிமையைப் பயன்படுத்தித் தப்பித்த சவேந்திர சில்வா, இன்று சர்வதேச விசாரணைகளுக்கு முகங்கொடுக்காமல் மறுப்புத் தெரிவிப்பது முரண்பாடானதாகும்.




இராணுவத்தினரைத் தண்டனையிலிருந்து பாதுகாக்கும் அரசாங்கங்களின் அரசியல் அச்சமும், சர்வதேசப் பொறிமுறைகளை சமூகப் பிளவு எனக் காரணம் காட்டி நிராகரிக்கும் போக்கும், இலங்கையில் மெய்யான நல்லிணக்கம் ஒருபோதும் சாத்தியமில்லை என்பதையே காட்டுகின்றன.

ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளும், அதைத்தொடர்ந்து இடம்பெறும் விவாதங்களும் வெறும் வார்த்தை ஜாலங்களாகவும், அறிக்கைப் போராகவுமே சுருங்கிப் போய்விட்டன.

உள்நாட்டில் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மற்றும் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் மூலம் நாட்டை மீளக் கட்டியெழுப்ப அரசாங்கம் முயன்றாலும், கடந்தகால

தொடர்ச்சி: பக்கம் 14




12 நாட்கள் நீரின்றி உண்ணாவிரதம் இருந்து, ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து உயிரைத் தியாகம் செய்த 23 வயது இளைஞனின் வரலாற்றுப் போராட்டம்

தியாகதீபம் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவு தினம் 2026 செப்டம்பர் 26ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. 39 ஆண்டுகளுக்கு முன்னர், வெறும் 23 வயதான ஓர் இளைஞன் தனது மக்களின் உரிமைகளுக்காக உணவையும் நீரையும் முற்றாகத் துறந்து, சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டான். அந்தப் போராட்டமும், அதில் வெளிப்பட்ட அவரது அர்ப்பணிப்பும் இன்றும் நினைவு கூரப்படுகின்றன.




1987 ஜூலை 29ஆம் திகதி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன வுக்கும் இடையில் இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதன் பின்னர் இந்திய அமைதிப்படை இலங்கைக்கு வந்தது.

இந்தச் சூழலில், தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் தாயகப் பிரதேசங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பில் விடுதலைப் புலிகள் அதிருப்தி வெளியிட்டனர்.

1987 ஆகஸ்ட் 4ஆம் திகதி யாழ்ப்பாணம் சுதுமலையில் தலைவர் வே. பிரபாகரன் மக்களைச் சந்தித்து, இலங்கை-இந்திய ஒப்பந்தம் தொடர்பான தனது நிலைப்பாட்டை விளக்கினார். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் உறுதிமொழிகளை நம்பி ஆயுதங்களை ஒப்படைக்க முடிவு செய்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.



ஆனால், பின்னர் இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே முரண்பாடுகள் அதிகரித்தன. தமிழ் மக்களுக்கும் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

### ஐந்து கோரிக்கைகளுடன் ஆரம்பித்த போராட்டம்

இந்த நிலையில், இந்திய அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் 1987 செப்டம்பர் 15ஆம் திகதி நல்லூர் கந்தசுவாமி கோயில் வளாகத்தில் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.



அவரது கோரிக்கைகளில் வடக்கு-கிழக்கில் திட்டமிடப்படும் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்துதல், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், அவசரகாலச் சட்டத்தை நீக்குதல், ஊர்காவல் படையினரிடமிருந்த ஆயுதங்களை அகற்றுதல் மற்றும் தமிழர் பிரதேசங்களில் புதிய பொலிஸ் நிலையங்களைத் திறப்பதை நிறுத்துதல் ஆகியவை இடம்பெற்றன.

போராட்டம் ஆரம்பிக்கும் முன்னரே இந்தக் கோரிக்கைகள் இந்தியத் தூதரகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. உரிய பதில் கிடைக்காத நிலையில் திலீபன் தனது போராட்டத்தைத் தொடங்கினார்.

### நாளுக்கு நாள் மோசமடைந்த உடல்நிலை

முதல் சில நாட்களில் திலீபன் மக்களுடன் உரையாடியதுடன், தனது கோரிக்கைகள் நிறைவேறும் வரை ஒரு சொட்டுத் தண்ணீர்கூட அருந்தப் போவதில்லை என்று உறுதியாகத் தெரிவித்தார்.

அவரது உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்தது. சிறுநீர் கழிப்பதில் சிரமம் ஏற்பட்டது. நாடித்துடிப்பும் சுவாசத் துடிப்பும் அதிகரித்தன. ஏற்கனவே வயிற்றில் ஏற்பட்ட காயம் காரணமாக அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருந்ததும் அவரது உடல்நிலையை மேலும் பாதித்ததாகக் கூறப்படுகிறது.

நல்லூர் வளாகத்தில் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். வடக்கு-கிழக்கின் பல பகுதிகளிலும் திலீபனுக்கு ஆதரவாக அடையாள உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்திய அதிகாரிகளுடனும் விடுதலைப் புலிகள் தரப்பினருடனும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றபோதிலும், திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் நிறுத்தப்படவில்லை.

செப்டம்பர் 24ஆம் திகதியளவில் அவரது கை, கால்கள் சோர்வடைந்து, உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. அடுத்த நாள் அவர் கோமா நிலைக்குச் செல்லும் நிலையில் இருந்ததாகக் கூறப்பட்டது.

### செப்டம்பர் 26 – தியாகத்தின் இறுதி நாள்

1987 செப்டம்பர் 26ஆம் திகதி திலீபனின் உடல்நிலை மிகவும் மோசமடைந்தது. 12 நாட்கள் உணவும் நீரும் இன்றி உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்த அவர், தனது சுயநினைவு தப்பினாலும் தனக்கு நீரோ குளுக்கோஸோ வழங்கக்கூடாது என்று ஏற்கனவே உறுதியளிக்கச் செய்திருந்ததாகக் கூறப்படுகிறது.

அன்று காலை 10.48 மணியளவில் திலீபனின் உயிர் பிரிந்தது. அவரது மரணம் யாழ்ப்பாணம் முழுவதும் பெரும் அதிர்வை ஏற்படுத்தியது. மக்கள் கண்ணீர் விட்டு அழுதனர். தலைவர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## பா.அரியநேத்திரன்

திலீபனின் உடல் பின்னர் அவரது விருப்பத்துக்கு அமைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்திடம் கையளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

### ஒரு மருத்துவராகியிருக்க வேண்டிய இளைஞன்

1963 நவம்பர் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் ஊரெழுவில் பிறந்த திலீபன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றார். பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகி மருத்துவக் கல்வியைத் தொடர்ந்தார்.

இலங்கையின் அரசியல் சூழ்நிலை மற்றும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளின் பின்னணியில், தனது மருத்துவக் கல்வியை இடைநிறுத்தி 1983ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் முழுநேரப் போராளியாக இணைந்தார். பின்னர் யாழ்ப்பாண மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராகவும் பணியாற்றினார்.

இன்று அவர் உயிருடன் இருந்திருந்தால் 62 வயதை அடைந்திருப்பார். ஒருவேளை மருத்துவராகப் பணியாற்றி, குடும்பத்துடன் வாழ்ந்திருக்கலாம். ஆனால், 23 வயதிலேயே தனது வாழ்க்கையை மக்களின் உரிமைக்காக அர்ப்பணித்தார்.

திலீபனின் வாழ்க்கையும் மரணமும் பல்வேறு அரசியல் பார்வைகளில் மதிப்பிடப்பட்டாலும், தனது கொள்கைக்காக உணவும் நீரும் துறந்து உயிரை அர்ப்பணித்த ஓர் இளைஞனின் தியாகம் என்ற வகையில் அவரது போராட்டம் தமிழ் மக்களின் நினைவில் இன்றும் நிலைத்திருக்கிறது.

அவரது தியாகத்தை நினைவுகூரும் இந்த நாளில், அவர் ஏன் அந்தப் போராட்டத்தைத் தேர்ந்தெடுத்தார், எதற்காக தனது இளமையையும் உயிரையும் அர்ப்பணித்தார் என்பதைக் குறித்து அடுத்த தலைமுறை சிந்திப்பதே அவருக்கு செலுத்தக்கூடிய உண்மையான அஞ்சலியாக அமையும்.

• • •

தேர்தலை முன்னிட்டு ... தொடர்ச்சி...

பெறுவீர்கள்; உங்களுக்கு 5,000 டாலர் கிடைக்கும்," என்று உற்சாகமடைந்த கூட்டத்தினரிடம் ட்ரம்ப் கூறினார். "இது 'ட்ரம்ப் பங்கீட்டுத் தொகை' (Trump Dividend) என்று அழைக்கப்படும்." "இதில் உள்ள ஒரே நிபந்தனை என்னவென்றால், வழங்கப்படும் அந்தத் தொகையை அமெரிக்காவிற்குள்ளேயே செலவிட வேண்டும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தொகையை எவ்வாறு வழங்குவது அல்லது அதற்கான நிதியை எங்கிருந்து திரட்டுவது என்பது குறித்து அதிபர் விளக்கவில்லை. ஒரு வயது வந்தவருக்கு 5,000 டாலர் வீதம் கணக்கிட்டால், இத்திட்டத்திற்கு 1 டிரில்லியன் டாலருக்கும் அதிகமான செலவு ஏற்படக்கூடும்.

வரிகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகள் மூலம் அமெரிக்காவிற்குள் வந்து சேரும் பணத்தைப் பற்றி ட்ரம்ப் மீண்டும் மீண்டும் பெருமையாகப் பேசினார். நாட்டிற்குள் 20 டிரில்லியன் டாலருக்கும் அதிகமான புதிய முதலீடுகள் வருவதாக அவரது நிர்வாகம் முன்பு கூறியிருந்தது; அதேவேளையில், ஆண்டுதோறும் கிடைக்கும் வரி வருவாய் பல நூறு பில்லியன் டாலர்களை எட்டக்கூடும் என்று கருவூலத் துறை அதிகாரிகள் கணித்துள்ளனர்.




* பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து விரிவான ஆய்வு! வான் பாதுகாப்பு கூட்டு முயற்சிக்கும் திட்டம்!
* கடல் பாதுகாப்பு – பிராந்திய ஸ்திரத்தன்மை மீதான கவனம். அன்று புலிகளை நோக்கி! இன்று சீனாவுக்கு எதிராக!
* கடந்த 17 ஆண்டுகளாகத் தமிழ்த் தரப்புக்கு வெறும் சந்திப்புகள் மட்டுமே விஞ்சிக் கிடக்கின்றன!

பத்திரிகையாளர் **அ. நிக்ஸன்**

1987ஆம் ஆண்டு இந்திய – இலங்கை ஒப்பந்தம் (Indo-Sri Lanka Accord) ஏற்படுத்தப்பட்டு, 38 ஆண்டுகளுக்குப் பின்னர் கொழும்புக்கு உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொள்ளும் முதல் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் என்ற பெருமையுடன் ராஜ்நாத் சிங் வருகை தந்துள்ளார்.



இந்தோ – பசிபிக் பிராந்திய விவகாரங்களை மையமாகக் கொண்ட பாதுகாப்பு ஒப்பந்த மீளாய்வு உள்ளிட்ட இருதரப்புப் பாதுகாப்புப் பங்களிப்புகள் குறித்து அமைச்சர் விரிவாகப் பேசவுள்ளார்.

இதற்கு முன்னர், 1988ஆம் ஆண்டு ராஜீவ் காந்தியின் அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி வகித்த கே. சி. பந்த் (K. C. Pant) இலங்கைக்கு உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

இன்று நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவையின் பாதுகாப்பு அமைச்சர் கொழும்பு வந்துள்ளார்.

1988இல் கே. சி. பந்த் வந்தபோது, அமைதிப் படை என அழைக்கப்பட்ட இந்தியப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்கனவே முழு அளவிலான போர் (Operation Pawan) ஆரம்பித்திருந்தது.

இந்தியப் படை கொழும்பின் பாதுகாப்பிற்குப் பொறுப்பேற்றிருந்ததோடு, வடக்கு – கிழக்கில் புலிகளுக்கு எதிராகப் போரிட்டுக்கொண்டிருந்தது.

ஆகவே, இந்திய இராணுவம் களத்தில் இருந்த சூழலில், அதன் போர்த் தந்திரோபாயங்கள், இலங்கையுடனான இராணுவ ஒருங்கிணைப்பு மற்றும் பாதுகாப்பு நிலவரங்களை நேரடியாக ஆய்வு செய்யவே பாதுகாப்பு அமைச்சர் கே. சி. பந்த் அப்போது கொழும்பு வந்தார்.

அதேபோன்று, 38 ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது இந்த ஆண்டு, நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கொழும்புக்கு வந்துள்ளமை வெறுமனே வழமையான (Routine visit) பயணம் அல்ல.

மாறாக, ஆழமான புவிசார் அரசியல் மற்றும் பாதுகாப்புப் பின்னணிகளைக் கொண்டதாக இப்பயணம் அமைந்துள்ளது.

அதாவது, அன்று விடுதலைப் புலிகளை நோக்கியும், இன்று சீனாவுக்கு எதிராகவும் இராணுவ உத்திகளை வகுக்கும் திட்டத்தோடு இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் இந்த வருகை அமைந்துள்ளது.

குறிப்பாக, இந்தியப் பெருங்கடலில் இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளை, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்துடன் இந்தியாவின் மூலோபாயக் கூட்டணியைப் பலப்படுத்தும் ஒரு முக்கிய புவிசார் அரசியல் நகர்வாகவும் இதனை விவரிக்க முடியும்.

இந்திய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ தகவல்களின் பிரகாரம், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதும், குறிப்பாக இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பை (Maritime Security) உறுதிப்படுத்துவதும் பிரதான இலக்குகளாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

அதேநேரம், 2025ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்திடப்பட்ட 'பாதுகாப்பு ஒத்துழைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்' (Defence Cooperation MoU) தற்போதைய செயல்பாடுகள் குறித்து மீளாய்வு செய்யப் படவுள்ளது.

வான் பாதுகாப்பு அமைப்புகள் (Air-defence systems) தொடர்பான கூட்டு முயற்சிகள் குறித்தும் விவாதிக் கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாக 'தி இந்து' (The Hindu) ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.



இந்தியப் பெருங்கடலில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வரும் சூழலில், இந்தியாவின் 'அயல் நாடுகளுக்கு முதலிடம்' (Neighbourhood First) கொள்கை மற்றும் 'மகாசாகர்' (MAHASAGAR) தொலைநோக்குப் பார்வை ஆகியவற்றின் கீழ் இலங்கையைத் தம் பக்கம் தக்கவைத்துக்கொள்ளும் இந்தியாவின் புவிசார் அரசியல் நகர்வாகவே புதுடில்லி ஊடகங்கள் இதனைச் சித்தரிக்கின்றன.

ஆனால், தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வுகளின் பின்னணியில், ராஜ்நாத் சிங்கின் இந்த வருகை நேரடியாகப் போர்க்குற்ற விசாரணைகளுடன் தொடர்புடையது என ஈழத்தமிழர்கள் எவரும் கற்பனை செய்துகொள்ளக் கூடாது.

புவிசார் அரசியல் ரீதியாக இதற்கு ஒரு பின்னணி உள்ளது. அதாவது, ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வுகளில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் கொண்டுவரப்படும்போது, இலங்கை அரசாங்கம் இந்தியாவின் ஆதரவையோ அல்லது நடுநிலையையோ எதிர்பார்ப்பது வழமை.

ஆனால், இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் இந்த விஜயம் முற்றுமுழுதாக இராணுவ, கடல்சார் பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மை சார்ந்த எல்லைகளுக்குள்ளேயே திட்டமிடப்பட்டுள்ளது.

ஆகவே, இந்த இருதரப்புப் பேச்சுக்களில் போர்க்குற்ற விசாரணைகள் நேரடியாக விவாதப் பொருளாக மாறுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு.

அதேநேரம், இப்பயணத்தால் அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு உடனடி நெருக்கடிகள் எதுவும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை மாறாக, இது இலங்கைக்கு ஒரு சாதகமான சூழலை உருவாக்கக்கூடும்.

இடதுசாரிச் சார்புடையதாகக் கருதப்படும் அநுர அரசாங்கம் பதவியேற்றபோது, சீனாவின் பக்கம் அதிகம் சாய்ந்துவிடுமோ என்ற கவலை இந்திய அரசுக்கு இருந்தமை உண்மை.



ஆனால், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய ஆகியோரை ராஜ்நாத் சிங் நேரில் சந்திப்பது, இரு நாடுகளுக்கும் இடையே சுமுகமான மற்றும் நம்பகமான உறவு தொடர்வதைக் காட்டுகிறது.

2022இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா இலங்கைக்கு வழங்கிய உதவிகளைத் தொடர்ந்து, தற்போது பாதுகாப்புத் துறையிலும் இந்தியாவின் ஒத்துழைப்பு நீடிப்பது, பிராந்திய ரீதியாக இலங்கை அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையை சர்வதேச அளவில் வலுப்படுத்த உதவும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஆகவே, ஈழத்தமிழ் மக்களின் கூட்டுரிமையை ஒருமித்த குரலில் உறுதியாக வலியுறுத்தக்கூடிய பலமான அரசியல் தலைமை உருவாகும் வரை, அமெரிக்கா – இந்தியா போன்ற வல்லரசுகள் தங்களின் புவிசார் அரசியல் நலன்களுக்கு ஏற்பவே இத்தகைய அணுகுமுறைகளைக் கையாளும்.



2009 மே மாதத்திற்குப் பின்னரான கடந்த 17 ஆண்டுகளில், தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்த விவகாரம் குறித்து தீர்க்கமாகச் சிந்திக்கத் தவறிவிட்டன.

மாறாக, கொழும்புக்கு வந்து செல்லும் இந்திய வெளியுறவு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் போன்ற உயர்மட்ட இராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேசுவதையே வாடிக்கையாகக் கொண்டுள்ளன.

கடந்த 17 ஆண்டுகாலத்தில் இத்தகைய சந்திப்புகளை நடத்தியதைத் தவிர, அந்தக் கட்சிகள் சாதித்தது என்று சொல்வதற்கு வேறு எதுவுமே இல்லை. வெறும் சந்திப்புகளும் உறுதிமொழிகளும் மாத்திரமே விஞ்சிக் கிடக்கின்றன.

• • •




இறுதிப்போரில் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாகத் தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மறுத்து இந்திய ஊடகமொன்றுக்கு (இம்பேக்ட் ஸ்டோரிஸ்’/Impact Stories) நேர்காணல் வழங்கியுள்ளார். தான் போர்க்குற்ற வாளி இல்லை என்றும், இலங்கைப் பாதுகாப்புப் படை யினர் தொழில்முறை அடிப்படையிலேயெ போரிட்டதாக வும், பொதுமக்கள் உயிரிழப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். அமெரிக்காவும் பிரித்தானியாவும் தன் மீது விதித்துள்ள தடைகளுக்கான காரணங்களையும் அவர் அதில் கேள்வி க்குள்ளாக்கியுள்ளார்.

### யார் இந்தச் சவேந்திர சில்வா?

சவேந்திர சில்வா கூறும் மறுப்பை மட்டும் வைத்து 2009 இறுதிப்போரின் வரலாற்றை மதிப்பிட முடியாது. ஏனெனில் அவர்மீது முன்வைக்கப்பட்டிருப்பவை வெறுமனே தமிழர் அரசியல் அமைப்புகளின் குற்றச்சாட்டுகளல்ல. ஐக்கிய நாடுகள்சபையின்விசாரணைகள்,மனித உரிமை அமைப்புக ளின் ஆவணங்கள், சர்வதேச ஊடகங்களின் புலனாய்வுகள், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சாட்சிகள் மற்றும் அதனைத் தொடர்ந்து அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் எனப் பல தரப்புக்களினால் இந்தக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.



2009ஆம் ஆண்டு இறுதிப்போரின் முக்கியமான இராணுவத் தளபதிகளில் ஒருவராக இருந்தவர் சவேந்திர சில்வா. குறிப்பாக இலங்கை இராணுவத்தின் 58ஆவது படைப்பிரிவின் தளபதியாக அவர் செயற்பட்டார். இறுதிக் கட்டப் போரில் பொதுமக்கள் பெருமளவில் சிக்கியிருந்த பகுதிகளில் இந்தப் படைப்பிரிவு முன்னெடுத்த இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் விசாரணை அறிக்கையான OISL பல்வேறு கடுமையான விடயங்களைப் பதிவு செய்துள்ளது. புதுமாத் தளன் மருத்துவமனை மீதான தாக்குதல்கள் தொடர்பாகவும் அந்த அறிக்கை சவேந்திர சில்வாவின் வாக்குமூலத்தையும் அதற்கு முரணான சாட்சியங்களையும் பதிவு செய்கிறது. மருத்துவமனை மீது மீண்டும் மீண்டும் தாக்குதல்கள் இடம் பெற்றதாக சாட்சிகள் தெரிவித்ததாக அறிக்கை குறிப்பிடு கிறது.

### தனிநபர் மீதான குற்றச்சாட்டா?

இங்கு முக்கியமானது ஒரு தனிநபர் மீது குற்றம் சுமத்தப் படுவதாக இல்லாமல் கட்டளைப் பொறுப்பு என்ற சர்வதேச சட்டக் கோட்பாடே இவ்விவகாரத்தின் அடிப்படையில் இருக்கிறது. 2020ஆம் ஆண்டு அமெரிக்கா சவேந்திர சில்வாவைத் தடை செய்தபோது, 2009 இறுதிப்போரின்போது 58ஆவது படைப்பிரிவால் இடம்பெற்றதாகக் கூறப்படும் சட்டவிரோத கொலைகளில் அவரது கட்டளைப் பொறுப்பின் ஊடான தொடர்பு குறித்து நம்பகமான தகவல்கள் இருப் பதாகக் குறிப்பிட்டது. இது ஒரு அரசியல் அறிக்கை மாத்திரமின்றி அமெரிக்காவின் மனித உரிமைத் தடைக் கட்டமைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட உத்தியோகபூர்வ நடவடிக்கையாகும்.



அதைத் தொடர்ந்து 2025 மார்ச் 24ஆம் திகதி பிரித்தா னிய அரசும் சவேந்திர சில்வாவுக்கு எதிராகப் பயணத் தடை மற்றும் சொத்து முடக்கம் உள்ளிட்ட தடைகளை விதித்தது. பிரித்தானியாவின் உத்தியோகபூர்வ காரண விளக்கத்தில், அவர் 58ஆவது படைப்பிரிவின் தளபதியாக இருந்த காலத்தில் சட்டவிரோதக் கொலைகள் மற்றும் சித்திர வதை அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தைக்கு ஒப்பான செயற்பாடுகள் இடம்பெற்ற தாகவும், சரணடைய முயன்ற விடுதலைப் புலிகளின் தலை வர்களைக் கொல்ல அவர் உத்தரவிட்டதாகவும், போரின் இறுதி நாட்களில் அவரது கட்டுப்பாட்டிலிருந்த படையினர் சரணடைந்தவர்களை கொன்றதாகவும் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### ஐ.நாவின் சுட்டிக்காட்டல்

இதனைவிட முக்கியமானது, ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகமே 2024ஆம் ஆண்டு வெளியிட்ட இலங்கைப் பொறுப்புக்கூறல் தொடர்பான அறிக்கையில் சவேந்திர சில்வாவுக்கு எதிரான அமெரிக்கத் தடையை பதிவு செய்துள்ளது. அதில், 2009 இறுதிப்போரின்போது 58ஆவது படைப்பிரிவால் இடம்பெற்ற சட்டத்துக்கு புறம்பான கொலை களில் கட்டளைப் பொறுப்பின் ஊடாக அவர் தொடர்பு பட்டதாக நம்பகமான தகவல்கள் இருந்ததாக அமெரிக்கா குறிப்பிட்டமை தெளிவாகப் பதிவாகியுள்ளது.



தமிழர்களின் குற்றச்சாட்டு இதைவிட ஆழமானது. இறுதிப்போரின் போது பாதுகாப்பான பகுதிகள் என அறிவிக்கப்பட்ட இடங்களிலும் பொதுமக்கள் கொல்லப்பட்ட னர்; மருத்துவமனைகள் தாக்கப்பட்டன. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்து இன்று வரை பதில் இல்லை. சரணடைந்தவர்களின் நிலை குறித்து குடும்பங்கள் பல ஆண்டுகளாகக் கேட்டு வருகின்றன. குறிப்பாக வெள் ளைக் கொடியுடன் சரணடைந்தவர்களின் பின்னர் ஏற்பட்ட நிலை தொடர்பான குற்றச்சாட்டுகள், சவேந்திர சில்வா தலைமையிலான 58ஆவது படைப்பிரிவைச் சுற்றியே தொடர்ந்து எழுப்பப்பட்டுள்ளன. அமெரிக்க நீதிமன்றத்தில்

தீபச்செல்வன்

தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றிலும், சவேந்திர சில்வாவின் கட்டுப்பாட்டிலிருந்த படையினரால் சரண டைந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும், பொதுமக்கள் வாழ்ந்த பகுதிகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

### மனித குலம் அஞ்சும் கொலைகள்

சர்வதேச ஊடகங்களும் இந்தக் கேள்வியைத் தொடர்ந்து எழுப்பியுள்ளன. குறிப்பாக இறுதிப்போரில் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், சரணடைந்தவர்களின் கொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான சாட்சியங்கள் சர்வதேச அளவில் நீண்டகாலமாக விவாதிக் கப்பட்டு வருகின்றன. போரின் இறுதிக் கட்டத்தைப் பதிவு செய்த காணொளிகள் தொடர்பாகவும் ஐ.நா. விசேட அறிக்கையாளர்களால் நிபுணர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட் டன. அந்தக் காணொளிகள் போலியானவை என்பதற்கான ஆதாரம் இல்லை என நிபுணர் மதிப்பீடுகள் கூறியுள்ளன.



அப்படியிருக்க, “நான் போர்க்குற்றவாளி அல்ல” என்று சவேந்திர சில்வா கூறுவது மட்டுமே இந்த விவகாரத்து க்கு முடிவாகிவிட முடியாது. அதேபோன்று, அமெரிக்கா அல்லது பிரித்தானியா விதித்த தடைகள் இத்தடைகள் ஏன் விதிக்கப்பட்டன என்ற கேள்விக்கு அதிகாரபூர்வ ஆவணங்களில் தெளிவான பதில்கள் உள்ளன. அவை வெறும் அரசியல் கோஷங்களின் அடிப்படையில் உரு வாகவில்லை. மனித உரிமை மீறல்கள், சட்டவிரோதக் கொலைகள் மற்றும் கட்டளைப் பொறுப்பு குறித்த தீவிர மான குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே அவை மேற் கொள்ளப்பட்டுள்ளன என்பதும் கவனத்திற்குரியது.

### ஏன் விசாரணைக்கு அச்சம்?

சவேந்திர சில்வாவை தன்னை நிரபராதி எனக் கருதினால், இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக சுயாதீனமான சர்வதேச விசாரணையை ஏன் எதிர்கொள்ளக்கூடாது? போரின் இறுதிக்கட்டத்தில்தமது கட்டுப்பாட்டில்இருந்த படையினரின் நடவடிக்கைகள் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, உண்மை வெளிப்படுத்தப்படுவதற்கு ஏன் பின்னிற்க வேண்டும்? இலங்கையின் கடந்தகால நிலை இதற்கு மாறானது. சர்வதேச அழுத்தங்கள் தொடர்ந்து இருந்தபோதிலும், போர்க் குற்றச்சாட்டுகளுக்கான நம்பக மான, சுயாதீனமான பொறுப்புக்கூறல் பொறிமுறை உரு வாக்கப்படவில்லை. இதன் விளைவாக குற்றச்சாட்டுகள் விசாரணையின்றி தொடர்கின்றன. பாதிக்கப்பட்ட குடும் பங்கள் பதிலின்றி நிற்கின்றன.

### அரசியல் குற்றச்சாட்டுக்கள் அல்ல

சவேந்திர சில்வா இன்று தன்னை ‘யுத்த வீரர்’ எனப்

தொடர்ச்சி: பக்கம் 14




மட்டக்களப்பு மாவட்டத்தின் சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, கொக்குவில் மற்றும் பனிச்சையடி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டு 36 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், இதுவரை நீதி கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்கள், சர்வதேச சமூகத்தின் தலையீட்டைக் கோரியுள்ளனர்.



இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற கொடூரமான மனித உரிமை மீறல்களில் ஒன்றாகக் கருதப்படும் சத்துருக்கொண்டான் படுகொலை, 1990ஆம் ஆண்டு செப்டெம்பர் 9ஆம் திகதி இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சத்துருக்கொண்டான் மற்றும் அதனைச் சூழவுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், கைக் குழந்தைகள், முதியவர்கள், சிறுவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட 187 பேர் அன்றைய தினம் மாலை சுமார் 5.30 மணியளவில் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



அவர்கள் சத்துருக்கொண்டான் பகுதியில் அமைந்திருந்த 'போய்ஸ் டவுண்' இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், அவர்களில் 186 பேர் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் தெரிவிக்கின்றன.

இப்படுகொலையிலிருந்து உயிர்தப்பிய ஒருவரின் மூலம் இராணுவ முகாமுக்குள் இடம்பெற்ற கொடூரங்கள் குறித்து தகவல்கள் வெளிப்பட்டதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

படுகொலையில் உயிரிழந்த 186 பேரில் சத்துருக் கொண்டானைச் சேர்ந்த 38 பேரும், பனிச்சையடியைச் சேர்ந்த 39 பேரும், பிள்ளையாரடியைச் சேர்ந்த 62 பேரும், கொக்குவில் கிராமத்தைச் சேர்ந்த 47 பேரும் அடங்குவதாகப் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் இடம்பெற்ற இந்தப் படுகொலை தொடர் பில், 1997ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் விசாரணை நடத்து வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற நீதிபதி கே. பாலகிட்னர் தலைமையில் இயங்கிய அந்த ஆணைக்குழு, சத்துருக்கொண்டான் படுகொலை தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொண்டதாகவும், அங்கு கடமையாற்றிய இராணுவ அதிகாரிகள் சிலர் படுகொலைக்கு நேரடிப் பொறுப்பாளிக ளாக அடையாளம் காணப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும், ஆணைக்குழுவின் பரிந்துரைகளு க்கு அமைய குற்றவாளிகளுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்படவில்லை எனவும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

படுகொலையில் தனது குடும்பத்தைச் சேர்ந்த பலரை இழந்த எஸ். சிங்கராஜா தெரிவிக்கையில்: "பாது காப்பும் நிவாரணமும் வழங்கப்படும் எனக் கூறி மக்களை இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர் களுக்கு என்ன நடந்தது என்பதை நாங்கள் நேரடியாகக் காணவில்லை. ஆனால், அங்கு நடந்த கொடூரங்கள் குறித்து நேரில் கண்டவர்கள் எங்களிடம் தெரிவித்தனர்.



எனது குடும்பத்தில் ஒன்பது சகோதரர்கள் இருந்தனர். அவர்களில் ஏழு பேரையும், எனது தாய், தந்தை உள்ளிட்ட பல உறவினர்களையும் இழந்துள்ளேன். எனது குடும்பத்தைச் சேர்ந்த 12 குடும்பங்களில் 52 பேர் கொல்லப் பட்டுள்ளனர்.

36 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால், இந்தப் படுகொலை தொடர்பில் யாரும் போதிய கவனம் செலுத்தவில்லை. இது உலகில் நடந்த கொடூரமான படு கொலைகளில் ஒன்றாகும். இதனை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்; உணர வேண்டும்" என்றார்.

இதனிடையே, 35 ஆண்டுகளுக்கும் மேலாக இழுத் தடிக்கப்பட்டு வரும் உள்நாட்டு நீதியின் மீது நம்பிக்கை யிழந்துள்ள பாதிக்கப்பட்ட மக்கள், தற்போது சர்வதேச சமூகத்தின் தலையீட்டை வலியுறுத்துகின்றனர்.

36ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில், முன் னாள் 'போய்ஸ் டவுண்' இராணுவ முகாம் அமைந்திருந்த பகுதியை முறையாக மனிதப் புதைகுழி அகழ்வுக்கு உட்படுத்த வேண்டும் எனவும், அகழ்வுப் பணிகள் சர்வதேச சுயாதீன நிபுணர்களின் நேரடி முன்னிலையிலும் மேற் பார்வையிலும் வெளிப்படையாக முன்னெடுக்கப்பட வேண் டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும், இலங்கையின் உள்நாட்டு நீதித்துறை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நீதியை வழங்கத் தவறி யுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ள அவர்கள், சத்துருக் கொண்டான் படுகொலை தொடர்பான விசாரணைகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உள்ளிட்ட சர்வதேச நீதிப் பொறிமுறைகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

சத்துருக்கொண்டான் படுகொலை நினைவேந்தல் குழுவின் தலைவர் வைரமுத்து குழந்தைவடிவேல் தெரி விக்கையில்: "கர்ப்பிணித் தாய்மார்கள், கைக்குழந்தைகள், முதியவர்கள், சிறுவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் இந்தக் கொடூரப் படுகொலையில் கொல்லப்பட்டனர். 36

மட்டு.நகரான்

ஆண்டுகள் கடந்த நிலையிலும், பாதிக்கப்பட்ட எமது மக் களுக்கு இதுவரை நீதி கிடைக்கவில்லை.

இலங்கை அரசாங்கங்கள் மாறி மாறி ஆட்சிக்கு வந்தபோதிலும், இந்தப் படுகொலை தொடர்பில் விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டன. ஜனாதிபதி ஆணைக் குழுக்களும் அமைக்கப்பட்டன. குற்றவாளிகளாக இரா ணுவ அதிகாரிகள் அடையாளம் காணப்பட்ட நிலையி லும், அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப் படவில்லை. எமது மக்களுக்கு உண்மையும் நீதியும் கிடைக் கும் வரை எமது போராட்டம் தொடரும்" என்றார்.

சத்துருக்கொண்டான் கூட்டுப்படுகொலை, தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய மனித உரிமை மீறல்களின் கறைபடிந்த அத்தியாயங்களில் ஒன்றாகப் பாதிக்கப்பட்ட தரப்பினரால் குறிப்பிடப்படுகிறது.

தங்களது அன்புக்குரியவர்களை இழந்து 36 ஆண்டுகளாக நீதிக்காகப் போராடி வரும் மக்களுக்கு இலங்கை அரசாங்கம் உரிய பொறுப்புக்கூறலை வழங்கத் தவறிவிட்டதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.



எனவே, சர்வதேச சமூகம் காலதாமதமின்றி தலையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மை மற்றும் நீதியை உறுதி செய்வதுடன், குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், செம்மணி பகுதியில் முன்னெடுக் கப்பட்ட அகழ்வுப் பணிகளைப் போன்று, சத்துருக்கொண்டா னில் முன்னாள் இராணுவ முகாம் அமைந்திருந்த பகுதியில் சர்வதேச கண்காணிப்புடன் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு, உண்மை வெளிக் கொணரப்பட வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் வலியுறுத்துகின்றனர்.

பல தசாப்தங்களாக அழிவுகளையும் இழப்புகளை யும் எதிர்கொண்டுள்ள தமிழ் மக்களுக்கு நீதியானதும் நியாயமானதுமான அரசியல் மற்றும் சட்டரீதியான தீர்வுகள் வழங்கப்பட்டு, தமது பாரம்பரிய பகுதிகளில் சுயமரியாதையுடன் வாழும் நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதற்கான முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டிய பொறுப்பு தற்போதைய நிலையில் சர்வதேச சமூகத்திடமே உள்ளது எனவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

• • •

## அமெரிக்கவின் மிகவும்... தொடர்ச்சி...

என்றும், அது "ரகசியத் தரவுகளைச் சேகரிக்கவோ அல்லது எந்தவொரு வகைப்படுத்தப் பட்ட சோனார் அல்லது ரேடார் உபகரணங்களையும் கொண்டிருக்கவோ இல்லை" என்றும் சென்ட்காம் செய்தித் தொடர்பாளரான அமெரிக்க கடற்படை கேப்டன் டிம் ஹாக்கின்ஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.




கரிகாலன்

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் மூன்று நாள் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயமானது, எதிர்பார்க்கப்பட்டது போலவே இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகளில் புதிய எல்லையைத் தொடும் மிக முக்கியமான நிகழ்வாக அமைந்திருக்கின்றது.



1988ஆம் ஆண்டு இந்தியப் படைகள் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில், அப்போதைய இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் கே.சி. பந்த் மேற்கொண்ட உத்தியோகபூர்வப் பயணத்திற்குப் பின்னர், கிட்டத்தட்ட 38 ஆண்டுகளுக்குப் பிறகே இந்த விஜயம் இடம்பெற்றுள்ளது.

ஏறக்குறைய நான்கு தசாப்த கால இடைவெளிக்குப் பின்னரான இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஒருவரின் வருகையானது, வெறும் சாதாரண இருதரப்பு நட்புறவுச் சந்திப்பு என்பதற்கு அப்பால், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் வல்லரசுகளின் போட்டியையும், இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு தொடர்பான உத்திசார் நகர்வுகளையும் மையமாகக் கொண்டிருக்கிறது.

கொழும்பிற்கு விஜயம் செய்த இந்தியப் பாதுகாப்பு அமைச்சருக்கு முப்படை மரியாதையுடன் அமோக வரவேற்பளிக்கப்பட்டதோடு, அவர் கொழும்பிலுள்ள இந்திய அமைதிப்படையினரின் நினைவுத் தூபியில் தமது உயிரைத் தியாகம் செய்த படையினருக்கு அஞ்சலியும் செலுத்தினார்.

இந்த விஜயத்தின் மிக முக்கிய அம்சமாக, ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோரின் முன்னிலையில் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான மூன்று புதிய ஒப்பந்தங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் இவை கைச்சாத்திடப்பட்டுப் பரிமாறப்பட்டன.

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் முதலாவதாக, இலங்கை விமானப்படைக்கு இந்தியா முன்னதாக வழங்கிய 40 மி.மீ. எல்-70 ரக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளை நவீனமயப்படுத்திக் கொடுப்பதற்கான உடன்பாடு காணப்படுகிறது.

இரண்டாவதாக, இந்தியாவின் தேசிய பாதுகாப்புக் கல்லூரிக்கும் இலங்கையின் தேசிய பாதுகாப்புக் கல்லூரிக்கும் இடையிலான கல்விசார் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் உள்ளது.

மூன்றாவதாக, இலங்கை மாணவர் படையணி மற்றும் இந்திய மாணவர் படையணிக்கு இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தமும் பரிமாறப்பட்டது.

இதற்கு முன்னர் இந்தியா பல்வேறு இராணுவ உதவிகளையும் கொடைகளையும் வழங்கியிருந்தாலும், இத்தகைய சிறிய அளவிலான புரிந்துணர்வு உடன்பாடுகளைச் செய்துகொள்வதில்லை.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்தியப் பயணத்தின் போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே, பாதுகாப்பு ஒத்துழைப்புகளைச் சீராக முறைப்படுத்தும் வகையில் இந்த உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

குறிப்பாக, இலங்கை விமானப்படைக்கான எல்-70 விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளை நவீனமயமாக்கும் திட்டம் இராணுவ ரீதியில் பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. 2006ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் தாக்குதல் அச்சுறுத்தல் தீவிரமடைந்திருந்த காலத்தில், இந்தியா 24 எல்-70 ரக துப்பாக்கிகளைக் கொடையாக வழங்கியிருந்தது.

அதில் 18 துப்பாக்கிகள் ஏற்கனவே மேம்படுத்தப்பட்ட நிலையில், எஞ்சியுள்ள 6 துப்பாக்கிகளையும் எந்தவிதக் கட்டணமுமின்றி முற்றிலும் இலவசமாக மறுசீரமைத்துத் தர இந்தியா முன்வந்துள்ளது.

பழமையான இந்தத் துப்பாக்கிகள், பாரத் எலக்ட்ரோனிக்ஸ் நிறுவனம் மூலம் அதிநவீன சென்சார்கள், கணினிமயப்படுத்தப்பட்ட குறிபார்த்துச் சுடும் வசதி, டிஜிட்டல் சூட்டுக் கட்டுப்பாட்டுத் தொகுதிகள் மற்றும் மின்சார இயக்கிகளுடன் மறுசீரமைக்கப்படவுள்ளன.

தற்போதைய நவீன வான்வழி மற்றும் ட்ரோன் அச்சுறுத்தல்களைச் சமாளிப்பதற்கு இவை இலங்கை முப்படையினருக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பாகப் பார்க்கப்படுகிறது.

அத்துடன், இந்த விஜயத்தின் போது கொழும்புத் துறைமுகத்திற்கு வருகை தந்த இந்தியக் கடற்படையின் ‘ஐ.என்.எஸ். உதயகிரி’ போர்க்கப்பலில் இடம்பெற்ற சிறப்பு நிகழ்வில், இலங்கை கடற்படை மற்றும் விமானப்படைக்கான உதிரிப்பாகங்களையும் ராஜ்நாத் சிங் கொடையாக வழங்கினார்.




தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் தாக்குதல்களை முன்கூட்டியே கண்டறிய வவுனியா, புத்தளம், கட்டுநாயக்க ஆகிய பகுதிகளில் நிறுவப்பட்ட இந்திரா எம்.கே-2 ரக ராடார் தொகுதிகளுக்கான உதிரிப்பாகங்களும், இலங்கை கடற்படைக் கப்பலான ‘சயுர’விற்கான உதிரிப்பாகங்களும் இதில் உள்ளடங்குகின்றன.

மேலும், இலங்கை இராணுவத்திற்காகச் ‘செயற்கை நுண்ணறிவு ஆய்வகம்’ ஒன்றை அமைத்துக்கொடுக்க இந்தியா உதவவுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்தார்.

தரவுப் பகுப்பாய்வு, எல்லைக் கண்காணிப்பு, சைபர் பாதுகாப்பு மற்றும் தளபாடத் திட்டமிடல் போன்றவற்றில் இந்த ஆய்வகம் இலங்கை இராணுவத்திற்குப் பெரும் பங்காற்றுமென எதிர்பார்க்கப்பட்டாலும், இது பாதுகாப்புத் துறையில் இலங்கையை இந்தியாவின் மறைமுகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடுமோ என்ற இறையாண்மை சார்ந்த சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் இந்தத் தீவிரப் பாதுகாப்பு அணுகுமுறைக்குப் பின்னணியில் பிராந்தியப் பூகோள அரசியலே முதன்மை காரணியாக விளங்குகின்றது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனா உள்ளிட்ட பிற வெளிநாடுகள் இலங்கையில் தடம் பதிப்பதைத் தடுப்பதும், இலங்கையைத் தனது பாதுகாப்பு வளையத்திற்குள் வைத்திருப்பதுமே இந்தியாவின் முதன்மை நோக்கமாகும்.

ராஜ்நாத் சிங் தனது உரையில், ‘எந்தவொரு நெருக் கடியான சூழலிலும் இலங்கைக்கு இந்தியா துணை நிற்கும்’ எனக் குறிப்பிட்டதன் மூலம், பிற நாடுகளின் தலையீடுகளைத் தடுப்பதற்கான ஓர் உத்திசார் உத்தரவாதத்தையே வழங்கியுள்ளார்.

அதேபோல, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடனான சந்திப்பில், ‘அயல்நாட்டுக்கு முதலிடம்’ என்ற இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் இலங்கைக்கு முக்கிய இடமுண்டு எனச் சுட்டிக்காட்டப்பட்டதுடன், இந்தியாவுக்கு எதிராக இலங்கை மண்ணை வேறு நாடுகள் பயன்படுத்த இடம் அளிக்கப்பட மாட்டாது என்ற உறுதியை ஜனாதிபதியும் மீள வலியுறுத்தினார்.



அதேவேளை, ‘தித்வா’ சூறாவளிப் பாதிப்பிற்குப் பின்னர் இந்திய இராணுவப் பொறியியல் படையினரால் குருநாகல் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அமைக்கப்பட்ட பன்சியகம, கெபெல்லேவ மற்றும் பழுகாமம் ஆகிய 03 பெய்லி பாலங்கள் காணொளி வாயிலாக மக்களிடம் கையளிக்கப்பட்டன.

கடந்த 10 மாதங்களாக இந்திய இராணுவத்தினர் இலங்கையில் நிலைகொண்டிருந்து இச்சேவையை வழங்கியமை, இந்தியாவிற்கு பாதுகாப்பு மனோநிலையை வழங்கிய அதேவேளை, பிராந்தியப் பாதுகாப்பில் இந்தியாவின் பங்களிப்பையும் வெளிப்படுத்தியுள்ளது.

இருப்பினும், இந்த உயர்மட்ட விஜயம் குறித்து உள்நாட்டு அரசியல் தளத்தில் பலத்த கேள்விகளும் விமர்சனங்களும் எழுப்பப்பட்டுள்ளன. இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் வருகை மற்றும் எட்டப்பட்ட ஒப்பந்தங்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பாதுகாப்பு, பிராந்தியச் சமநிலை மற்றும் பரஸ்பர மரியாதை அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்திய அதேவேளையில், முன்னிலை சோசலிசக் கட்சி கடுமையான சந்தேகங்களை வெளியிட்டுள்ளது.

38 ஆண்டுகளுக்குப் பிறகு வரும் ஒரு வல்லரசின் பாதுகாப்பு அமைச்சர், வெறும் கெடட் பயிற்சி அல்லது துப்பாக்கிப் பராமரிப்பு போன்ற சாதாரண விடயங்களுக்காக மட்டும் வந்திருக்க முடியாது என்றும், அரசாங்கம் உண்மையான பாதுகாப்பு ஒப்பந்தங்களின் விபரங்களை நாட்டு மக்களுக்கு மறைப்பதாகவும் அக்கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட சாடியுள்ளார்.

குறிப்பாக, இலங்கை சமீபகாலமாக ஆசியாவின் ‘குவாட்’ நாடுகளான இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகியவற்றுடன் தொடர்ச்சியாகப் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்து வருவதையும், அண்மையில் இலங்கைப் பாதுகாப்புச் செயலாளர் நேட்டோ அமைப்பின் இராணுவத் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தியதையும் சுட்டிக் காட்டியுள்ள எதிர்க்கட்சிகளும் இடதுசாரி அமைப்பு களும், இலங்கை தனது பாரம்பரிய ‘அணிசேராக் கொள்கையிலிருந்து’ விலகிச் செல்கிறதா என்ற அச்சத்தை வெளியிடுகின்றன.

இலங்கையின் இத்தகைய நகர்வுகள் அதனை ஒரு

தொடர்ச்சி: பக்கம் 14




மருதன் ராம்

இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை மனித உரிமைகளில் மிக முக்கியமானது தமக்கான சொந்த நில உரிமையாகும். 2023ஆம் ஆண்டில் பூனாகலை மற்றும் கபரகலை பகுதியில் ஏற்பட்ட மண்சரிவினால் வீடுகளை இழந்து சுமார் மூன்றரை ஆண்டுகள் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்ந்த 50 குடும்பங்களுக்கு “நவோதயாபுரம்” வீட்டுத் திட்டத்தின் கீழ் புதிய வீடுகள் சமீபத்தில் கையளிக்கப்பட்டன. அத்துடன் பதுளை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் 163 பயனாளிகளுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் கையளிக்கப்பட்டமை முக்கிய பேசுபொருளாகவும் அமைந்தது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க, மலையக மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாகவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகவும் பல முக்கிய வாக்குறுதிகளை வழங்கினார். எவ்வாறாயினும் அன்றைய தினம் அரசாங்கத்தி னால் வழங்கப்பட்ட உறுதி பத்திரம் உண்மையில் காணி உறுதி பத்திரம் தானா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது.



மலையக மக்கள் பல தலைமுறைகளாகச் சொந்தமாக ஒரு சிறு அளவான நிலம் கூட இன்றி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதால், கடுமையான பொருளாதார, சமூக மற்றும் சட்டச் சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். சொந்தமாகச் சட்டப்பூர்வமான காணி உறுதிப் பத்திரம் இல்லாததால், மலையக மக்களால் வங்கிகளில் அதனைப் பிணையமாக வைத்து முறையான கடன் வசதிகளைப் பெற முடிவதில்லை. இதனால் சுயதொழில் தொடங்கவோ, பிள்ளைகளின் மேற்படிப்புக்கோ அல்லது அவசரத் தேவைகளுக்கோ தனியார் வட்டிக்குக் கடன் கொடுப்போரிடம் சென்று பெரும் கடன் சுமையில் சிக்கிக் கொள்கின்றனர்.

காணி உரிமை பெருந்தோட்ட நிறுவனங்களின் வசமிருப்பதால், உள்ளூராட்சி மன்றங்கள் அல்லது பிரதேச செயலகங்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர், மின்சாரம், வீதிப் புனரமைப்பு மற்றும் அரச வீட்டுத் திட்டங்களுக்கான மானியங்களைப் பெறுவதில் பெரும் சட்டத் தடைகள் ஏற்படுகின்றன. கம்பனிகளின் அனுமதி இன்றி எவ்வித நிரந்தரக் கட்டுமானங்களையும் செய்ய முடிவதில்லை. உதாரணத்துக்கு தமக்கான மலசலக்கூடம் ஒன்றை அமைப்பதற்கு கூட பெருந்தோட்ட மக்கள் தோட்ட கம்பனிகளின் அனுமதியை பெற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

சொந்த நிலம் இல்லாததால், தமக்கென்று ஒரு நிரந்தர முகவரியைப் பெறுவதில் சிரமம் நிலவுகிறது. இது தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு மற்றும் வாக்காளர் பதிவுகளின் போது பல சிக்கல்களைத் தோற்றுவிக்கிறது. “தோட்டத்தில் பிறந்து, தோட்டத்தில் வேலை செய்து, தோட்டத்திலேயே மடியும்” லயன் அறை சுழற்சியிலிருந்து அவர்களால் வெளியேற முடியாமல் போகிறது. மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு உடனடியாக மாற்று நிலங்களை ஒதுக்குவதில் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே இழுபறி நிலை காணப்படுகிறது.

இதனால் பூனாகலை மக்களைப் போலப் பல குடும்பங்கள் தற்காலிக முகாம்களிலும் பாதுகாப்பற்ற இடங்களிலும் பல ஆண்டுகள் வாழ வேண்டிய அவலநிலை ஏற்படுகிறது. இந்த நிலையில் பூனாகலை மற்றும் கபரகலை மக்களுக்கு ஜனாதிபதி தலைமையில் காணி உறுதி பத்திரங்களை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றதுடன் இதன்போது ஜனாதிபதியினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் கவனிக்கத்தக்க விடயமாக மாற்றமடைந்தன.

காணி உரிமை இன்றி சவால்களை எதிர்நோக்கும் மலையக மக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் ஜனாதிபதி தனது உரையில் சில முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டிருந்தார். இந்நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் சிறந்த வாழ்க்கையை உரித்தாக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும், லயன் வாழ்க்கையிலிருந்து மலையக மக்களை வெளியேற்றி கௌரவமான வாழ்வை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் 2042 ஆம் ஆண்டளவில் நிறைவடையும் கம்பனிகளுடனான குத்தகை ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்து, அடுத்தகட்ட ஒப்பந்தங்களில் மலையக மக்களின் காணி மற்றும் குடியிருப்பு உரிமைகளைப் பாதுகாக்கும் சரத்துகள் கட்டாயமாகச் சேர்க்கப்படும் என்றார். இவைதவிர, மத்திய மலைநாட்டையும் அதன் சூழலையும் பாதுகாப்பதற்காக, பல்வேறு திணைக்களங்களின் அதிகாரங்களை ஒருங்கிணைத்து “மத்திய மலைநாட்டுப் பாதுகாப்பு அதிகாரசபை” ஒன்றை உருவாக்குவதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

அதேநேரம், வரவுசெலவுத் திட்டத்தில் வீட்டுத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதுடன், சிறுவர் மந்தபோஷணையைத் தடுக்கவும் கல்வியை மேம்படுத்தவும் விசேட திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார். ஜனாதிபதியின் இந்த வாக்குறுதிகள் ஒருபுறமிருக்க, பாராளுமன்றத்தில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், பூனாகலை மக்களுக்கு வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் அரசாங்கத்தின் பெருந்தோட்டக் கொள்கை குறித்துப் பல அதிரடி கேள்விகளை எழுப்பினார்.

மேலும், இது தொடர்பாகத் தனியார் ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய பிரத்தியேகச் செவ்வியிலும் இந்த விடயங்களை ஆழமாக விளக்கியுள்ளார். பாராளுமன்ற விவாதத்தின் போதும் தனியார் ஊடகச் செவ்வியிலும் சுட்டிக்காட்டிய அவர், சமீபத்தில் வழங்கப்பட்ட ஆவணங்கள் உண்மையான “காணி உறுதிப் பத்திரங்கள்” அல்ல என்றும், அவை பெருந்தோட்ட நிறுவனங்கள் அல்லது அமைச்சுடன் செய்யப்பட்ட “புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்” மட்டுமே என்றும் தெரிவித்தார்.

பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழ் குத்தகைக்கு உள்ள நிலங்களில் சட்டப்பூர்வமான பூரண காணி உரிமையை பயனாளிகளுக்கு உடனடியாக வழங்க முடி யாத சட்டச் சிக்கல்கள் நிலவுவதால், மக்களுக்கு வழங்கப் பட்டது வெறும் பயன்பாட்டு ஒப்பந்தம் தானா என்ற ஐயத்தை அவர் பகிரங்கமாக எழுப்பினார். இதுகுறித்து பாராளுமன்றத்தில் விரிவாக சுட்டிக்காட்டிய அவர், காணி உறுதி பத்திரத்துக்கும் அரசாங்கத்தால் அண்மையில் வழங்கப்பட்ட ஆவணத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்கியிருந்தார்.

அண்மையில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஆவணத்தின்படி, வீடுகளைப் பெற்ற மக்களுக்கு குறித்த வீடுகள் சொந்தமில்லை என்ற விடயம் புலப்படுவதாகவும் காணிகள் அரசாங்கத்துக்கே சொந்தமானவை என்ற அடிப்படையில் அவை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் ஜீவன் தொண்டமான் சுட்டிக்காட்டினார். காணி உறுதி பத்திரம்



மாத்திரமின்றி 2042 ஆம் ஆண்டு குத்தகை ஒப்பந்தத்தை நீட்டிக்கும் அரசாங்கத்தின் முயற்சி குறித்தும் அவர் விமர்சித்துள்ளார். பெருந்தோட்ட நிறுவனங்களுடனான நிலக் குத்தகை ஒப்பந்தங்கள் 2042-ஆம் ஆண்டே நிறைவடைகின்றன.

அவ்வாறிருக்க, அந்த ஒப்பந்தக் காலத்தை மேலும் நீட்டிப்பதற்கு அரசாங்கம் மறைமுகமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறதா? என்று ஜீவன் கேள்வி எழுப்பினார். மக்களின் நில உரிமையை மீட்டெடுப்பதாகக் கூறும் அதேவேளையில், கம்பனிகளுக்குக் குத்தகைக் காலத்தை நீட்டித்துக் கொடுக்க முயல்வது மலையக மக்களின் காணி உரிமையை மேலும் தாமதப்படுத்தும் செயல் என அவர் கண்டித்தார்.

தற்போதைய ஜனாதிபதியின் ஆட்சி காலம் 2029 ஆம் ஆண்டு நிறைவடைய உள்ளது. இவ்வாறிருக்க 2042 ஆண்டு நிறைவடையுள்ள குத்தகை ஒப்பந்தத்தை நீட்டிக்கும் தீர்மானத்துக்கான காரணம் குறித்து ஜீவன் தொண்டமான் கேள்வி எழுப்பியுள்ளார். இதன்படி, மலையக மக்கள் தொடர்ந்தும் தற்காலிக உரிமைகளுடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களுடனும் வாழ முடியாது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க பெருந்தோட்ட ஒப்பந்தங்களை மாற்றியமைக்கவும், மலையக மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் காட்டியுள்ள அரசியல் விருப்பம் வரவேற்கத்தக்கது.

எனினும், “காணி உறுதிப் பத்திரம்” என்ற பெயரில் வெறும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை வழங்கி மக்களை ஏமாற்றும் கடந்த கால அரசியல் கலாச்சாரம் இனி தொடரக் கூடாது. அதேபோல 2042 ஆம் ஆண்டு குத்தகை ஒப்பந்த நீட்டிப்பு என்ற பெயரில் கம்பனிகளுக்குச் சாதகமான முடிவுகள் எடுக்கப்படாமல், மலையக மக்கள் வெறும் குத்தகைக்காரர்களாக அல்லாமல், இந்நாட்டின் ஏனைய பிரஜைகளைப் போல முழுமையான மற்றும் சட்டப்படி செல்லுபடியாகும் காணி உறுதிப் பத்திரங்களைக் கொண்ட உண்மையான நில உரிமையாளர்களாக மாற்றப்பட வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகும்.

• • •




இந்த நேர்காணலில் ஜெனரல் சவேந்திர சில்வாவின் கடந்தகாலச் செயல்பாடுகளை மெருகேற்றி, அவரை ஒரு மனிதாபிமானமிக்கவராகச் சித்தரித்து, அவர் "எந்தத் தவறும் செய்யவில்லை" என்று வலியுறுத்தும் முயற்சி, ஈழத் தமிழர்களுக்கு - குறிப்பாக 17 ஆண்டுகளுக்கும் மேலாக உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காகப் போராடி வரும் பாதிக்கப்பட்டவர்கள், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு - ஆழ்ந்த மனவேதனையையும் அவமதிப்பையும் அளிப்பதாக உள்ளது.



ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை, 2009-ஆம் ஆண்டை இலங்கை அரசின் வசதியான "போர் முடிவு" என்ற கண்ணோட்டத்தில் மட்டும் சுருக்கிப் பார்க்க முடியாது. அது தமிழின அழிப்பின் உச்சகட்டமாக அமைந்தது; அதாவது, எங்கள் தாயகத்தில் பல தசாப்தங்களாகத் தொடர்ந்த திட்டமிட்ட வன்முறை, இடம்பெயர்வு, அழிவு, ஒடுக்குமுறை மற்றும் தமிழினத்தை அழித்தொழிக்கும் முயற்சிகளின் ஒரு முற்றுப்புள்ளியாக அது இருந்தது.

வன்னியில் நடந்த நிகழ்வை "வன்னி மனிதாபிமான நடவடிக்கை" என்று அழைப்பது அதை மனிதாபிமானமிக்கதாக மாற்றிவிடாது. அந்தச் சொல்லாடலே நடந்த நிகழ்வுகளைத் திரித்து எழுதும் முயற்சியின் ஒரு பகுதியாகும். இடைவிடாத குண்டுவீச்சுக்கு மத்தியில் சுருங்கிப்போன ஒரு பகுதிக்குள் தமிழ் பொதுமக்கள் சிக்கியிருந்தது, மருத்துவமனைகள் மற்றும் பொது மக்களின் இருப்பிடங்கள் மீதான தாக்குதல்கள், குடும்பங்கள் பிரிக்கப்பட்டது, இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் பின்னர் காணாமல் போனது, அல்லது சட்டவிரோதக் கொலைகள், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறைகள் குறித்த பரவலான குற்றச்சாட்டுகள் - இவற்றில் எதிலும் மனிதாபிமானம் ஏதுமில்லை.

தமிழின அழிப்பின் உச்சகட்டத்தின்போது நடந்த நிகழ்வுகளுக்கு ஜெனரல் சவேந்திர சில்வா ஒரு பார்வையாளராக இருக்கவில்லை. அவர் இலங்கை இராணுவத்தின் 58-வது படைப்பிரிவுக்குத் தலைமை தாங்கினார். அவரது கட்டளையின் கீழ் இருந்த படைகள் மீது கடுமையான மீறல் குற்றச்சாட்டுகள் உள்ளன. 58-வது படைப்பிரிவு நடத்திய சட்டவிரோதக் கொலைகள் போன்ற மனித உரிமை மீறல்களில், கட்டளைப் பொறுப்பின் அடிப்படையில் அவருக்கு இருந்த தொடர்பு குறித்த நம்பகமான தகவல்களின் காரணமாக, அமெரிக்கா பின்னர் அவர் மீது தடைகளை விதித்தது.

எனவே, ஒரு நேர்காணலில் வசதியாக அமர்ந்து கொண்டு, ஜெனரல் சவேந்திர சில்வா "போர்க்குற்றவாளி அல்ல" என்றும், அவர் "எந்தத் தவறும் செய்யவில்லை" என்றும் கூறுவது, இக்கேள்விகள் எதற்கும் சரியான பதிலல்ல. அவர் மறுப்பதை மீண்டும் மீண்டும் கூறுவது, அவர் மீதான குற்றச்சாட்டுகளையோ, அதற்கான ஆதாரங்களையோ அல்லது உயிர் பிழைத்த தமிழர்களின் சாட்சியங்களையோ அழித்துவிடாது.

தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பாலியல் வன்முறைகள் இந்த வரலாற்றிலிருந்து மறைக்கப்படாமல் இருப்பது மிக முக்கியம். 2009-ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் இலங்கை பாதுகாப்புப் படையினரால் நிகழ்த்தப்பட்ட பாலியல் வல்லுறவு, பாலியல் சித்திரவதை மற்றும் பிற வகையான பாலியல் வன்முறைகள் குறித்து உயிர் பிழைத்த தமிழர்கள் சாட்சியம் அளித்துள்ளனர். இந்தக் குற்றச்சாட்டுகள் சர்வதேச அளவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட அட்டூழியங்களைப் பற்றி விவாதிக்கும்போது, பாலியல் வன்முறையை ஒரு துரதிர்ஷ்டவசமான சிறு குறிப்பு என்று ஒதுக்கிவிட முடியாது.

செல்வி **ரேணுகா இன்பக்குமார்**
வழக்கறிஞர், அவுஸ்திரேலியா.
பேச்சாளர், தமிழ் ஏதிலிகள் கழகம்.

"மறுவாழ்வு" என்று கூறப்படுவது குறித்த கருத்துகளும் அதே அளவு கவலையளிக்கின்றன. 12,000 "பயங்கரவாதிகள்" தாங்கள் பயங்கரவாதிகள் என்பதை ஏற்றுக்கொண்டு, இலங்கை அரசால் கருணையுடன் "மறுவாழ்வு" அளிக்கப்பட்டனர் என்ற கதையாடலை, அது ஒரு மறுக்க முடியாத வரலாற்று உண்மை என்பது போல மீண்டும் மீண்டும் கூறக்கூடாது. மக்களை "மறுவாழ்வு பெறுபவர்கள்" என்று அரசு அழைப்பதன் பொருள், ஆயிரக்கணக்கான தமிழர்கள் தாங்களாகவே முன்வந்து பயங்கரவாதிகள் என்பதை ஒப்புக்கொண்டார்கள் என்பதல்ல. அரசால் தடுத்து வைக்கப்படுவது என்பது பயங்கரவாதத்தை ஒப்புக்கொள்வதாகாது. அதேபோல, அரசின் கட்டுப்பாட்டிலான ஒரு செயல்முறைக்கு "மறுவாழ்வு" என்ற பெயரைச் சூட்டுவது, தன்னிச்சையான சிறைபிடிப்பு, சித்திரவதை, பாலியல் வன்முறை மற்றும் மோசமான நடத்தைகள் குறித்த குற்றச்சாட்டுகளை நீக்கிவிடாது.

தளபதி சவேந்திர சில்வா தமிழர்களால் மதிக்கப்படுகிறார் என்பதற்கு இந்து மதகுருவை ஆதாரமாகக் காட்டுவது ஒருவேளை மிகவும் அருவருப்பானது.

நமது மக்களுக்கு எதிரான அட்டூழியங்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட படைகளுடன் தொடர்புடைய ஒரு இராணுவத் தளபதிக்கு, தமிழர்களின் கூட்டு ஏற்பை உருவாக்குவதற்காக, ஒரு இந்து மதகுரு சம்பந்தப்பட்ட புகைப்படம், விழா, உரையாடல் அல்லது தனிப்பட்ட செயலைப் பயன்படுத்த முடியாது. இலங்கை இராணுவத்தை நியாயப்படுத்தவோ அல்லது தமிழ் தேசத்தின் சார்பாகப் பேசவோ இந்து மதத் தலைவர்களை அரசியல் பகடைக்காய்களாகப் பயன்படுத்த முடியாது.

பொறுப்புக்கூறல், இராணுவமயமற்றதாக்குதல், நிலத்தைத் திரும்பப் பெறுதல் மற்றும் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் குறித்த பதில்களைக் கோருதல்போன்ற போராட்டங்களாலும்கோரிக்கைகளாலும் தமிழ் தாயகம் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வரும் வேளையில், அத்தகைய உரையாடல்கள் ஏதோ ஒரு வகையில் தளபதி சவேந்திர சில்வா தமிழ் ஈழத்தில் வரவேற்கப்படுகிறார் அல்லது மதிக்கப்படுகிறார் என்பதை நிரூபிக்கின்றன என்ற கருத்து குறிப்பாக அவமானகரமானது. யாரோ ஒருவர் ஒரு மதகுருவை சுட்டிக்காட்டி, தமிழர்களின் ஏற்பைக் கோருவதால் மட்டும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மற்றும் குடும்பங்களின் தொடர்ச்சியான எதிர்ப்பை எளிதில் அழித்துவிட முடியாது.

இந்தக் கதை எவ்வளவு ஆழமாக நிராகரிக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள விரும்பினால், வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் குரலைக் கேளுங்கள்.

பல ஆண்டுகளாக, தமிழ் தாய்மார்களும் காணாமல் போனவர்களின் உறவினர்களும் சாலையோரம் நின்று, பேரணி நடத்தி, போராட்டம் நடத்தி, ஒரே ஒரு அடிப்படை பதிலைக் கோரி வருகின்றனர்: எங்கள் பிள்ளைகள் எங்கே? இனப்படுகொலையின் இறுதி உச்சக்கட்டத்தின் போது, பல குடும்பங்கள் தங்கள் அன்புக்குரியவர்களை இலங்கை இராணுவத்திடம் தாங்களே நேரில் ஒப்படைத்ததாகக் கூறுகின்றன. மற்றவர்கள், இராணுவச் சோதனைச் சாவடிகளிலோ அல்லது அவர்கள் அரச காவலில் ஒப்படைக்கப்பட்ட பின்னரோ தங்கள் உறவினர்களைக் கடைசியாகப் பார்த்ததாகக் கூறுகின்றனர். ஒரு மனிதாபிமான இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து அமைதியான மறுவாழ்வு அளிக்கப்பட்டது என்ற கவனமாகக் கட்டமைக்கப்பட்ட இந்தக் கதைக்கு, அவர்களின் தொடர்ச்சியான தேடுதல் அடியோடு முரண்படுகிறது.

உலகம் முன்னேறிச் செல்ல வேண்டும் என்று இலங்கை அரசு விரும்புவதால் இந்தக் குடும்பங்கள் வரலாற்றிலிருந்து வெறுமனே மறைந்துவிடவில்லை. அவர்களின் போராட்டங்கள், தீர்க்கப்படாத தண்டனையின்மை அமைப்பிற்கு வாழும் சான்றுகளாகும். தங்கள் பிள்ளைகளுக்கு என்ன ஆனது என்பதை அறியாமலேயே தாய்மார்கள் இறந்துள்ளனர்.



அதனால்தான், ஈழத் தமிழர்கள் அனுபவிக்கும் தொடர்ச்சியான இனப்படுகொலையைப் புரிந்துகொள்வதற்கு, கட்டாயக் காணாமல் போதல் என்பது மிகவும் மையமானதாக விளங்குகிறது. இனப்படுகொலை என்பது 2009-ஆம் ஆண்டில் சில மாதங்களுக்குள் வசதியாகத் தொடங்கி முடிந்துவிட்ட ஒரு நிகழ்வாகத் தமிழர்களால் புரிந்துகொள்ளப்படுவதில்லை. பல பத்தாண்டுகளாகத் தொடரும் கொலைகள், காணாமல் போதல், இடம்பெயர்வு, வீடுகள் மற்றும் சமூகங்களின் அழிவு, கலாச்சாரம் மற்றும் நினைவுகளின் மீதான தாக்குதல்கள், இராணுவமயமாக்கல், மற்றும் தமிழ் மக்களின் தாய்நாட்டுடனான பிணைப்பைப் பாதிக்கும் முயற்சிகள் ஆகியவற்றின் பின்னணியில் தமிழர்களின் அனுபவத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

**இதனால்தான் இதுபோன்ற நேர்காணல்களில் பயன்படுத்தப்படும் மொழி முக்கியத்துவம் பெறுகிறது.**

**"மனிதாபிமான நடவடிக்கை."**
**"மறுவாழ்வு."**
**"பயங்கரவாதிகள்."**
**"அவர் எந்தத் தவறும் செய்யவில்லை."**
**"இந்து மதகுருக்கள் அவரை மதிக்கிறார்கள்."**

இக்கருத்துக்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்தி, வரலாற்றின் ஒரு மெருகூட்டப்பட்ட அல்லது திரித்துரைக்கப்பட்ட வடிவத்தை உருவாக்க முடியும்; இதில் இலங்கை இராணுவம் ஒரு மனிதாபிமான மீட்பராகவும், தமிழ் மக்கள் ஒடுக்கப்பட வேண்டிய பயங்கரவாதிகளாகவோ அல்லது தங்கள் "மீட்பர்களை" வரவேற்ற நன்றியுணர்வுள்ள மக்களாகவோ சித்தரிக்கப்படுகிறார்கள்.

**தொடர்ச்சி: பக்கம் 14**




A.M.L லம்பேட்

இன்றைய சர்வதேச அரசியலில் (International Politics) வேகமாக முக்கியத்துவம் பெற்று வரும் அமைப்பு களில் ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (Shanghai Cooperation Organisation – SCO) முக்கியமான ஒன்றாகும். மத்திய ஆசியப் பாதுகாப்பை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு, கடந்த 25 ஆண்டுகளில் யூரேசிய பிராந்தியத்தின் (Eurasian Region) முக்கியமான அரசியல் மற்றும் பாதுகாப்பு மேடையாக (Political and Security Platform) வளர்ந்துள்ளது.

2026 ஆகஸ்ட் 31 முதல் செப்டம்பர் 1 வரை கிர்கிஸ்தானின் தலைநகர் பிஷ்கெக்கில் (Bishkek Kyrgyzstan) நடைபெற்ற உச்சி மாநாடு (Summit), SCO உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்ததை குறிக்கும் முக்கியமான நிகழ்வாக அமைந்தது. மாநாட்டில் பிஷ்கெக் பிரகடனம் (Bishkek Declaration) உள்ளிட்ட பல ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.



SCO-வின் வரலாறு 1996ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஷங்காய் ஐந்து நாடுகள் அமைப்பு (Shanghai Five) என்ற பாதுகாப்பு ஒத்துழைப்பு முறையிலிருந்து தொடங்குகிறது. சீனா (China), ரஸ்யா (Russia), கசகஸ்தான் (Kazakhstan), கிர்கிஸ்தான் (Kyrgyzstan) மற்றும் தஜிகிஸ்தான் (Tajikistan) ஆகிய நாடுகள் எல்லைப் பாதுகாப்பு (Border Security), பரஸ்பர நம்பிக்கை (Mutual trust) மற்றும் பிராந்திய நிலைத்தன்மை (Regional Stability) ஆகியவற்றை வலுப்படுத்துவதற்காக இந்த அமைப்பை உருவாக்கின.

2001ஆம் ஆண்டு உஸ்பெகிஸ்தான் (Uzbekistan) இணைந்த பின்னர், ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (Shanghai Cooperation Organisation) அதிகாரப்பூர்வமாக உருவானது. ஆரம்பத்தில் இதன் முக்கிய கவனம் பிராந்திய பாதுகாப்பு (Regional Security), பயங்கரவாத எதிர்ப்பு (Counter-Terrorism), பிரிவினைவாத எதிர்ப்பு (Counter-Separatism) மற்றும் தீவிரவாத எதிர்ப்பு (Counter-Extremism) ஆகியவற்றில் இருந்தது. பின்னர் பொருளாதார ஒத்துழைப்பு (Economic Cooperation), எரிசக்தி பாதுகாப்பு (Energy Security), போக்குவரத்து இணைப்பு (Transport Connectivity) மற்றும் இராஜதந்திர ஒத்துழைப்பு (Diplomatic Cooperation) போன்ற துறைகளுக்கும் அதன் செயல்பாடுகள் விரிவடைந்தன.

2017ஆம் ஆண்டு இந்தியா (India) மற்றும் பாகிஸ்தான்) முழுமையான உறுப்பினர்களாக இணைந்தன. 2023ஆம் ஆண்டு ஈரான் 2024ஆம் ஆண்டு பெலாரஸ் ஆகியவை இணைந்ததன் மூலம் SCO-வின் உறுப்பினர் எண்ணிக்கை பத்தாக உயர்ந்தது.

2026 பிஷ்கெக் உச்சி மாநாடு (2026 Bishkek Summit) நடைபெறும் நேரத்தில் உலகம் பல்வேறு புவிசார் அரசியல் நெருக்கடிகளை (Geopolitical Crises) எதிர்கொண்டு வருகிறது. ஈரான் போர் . ரஸ்யா-உக்ரைன் போர், மேற்கத்திய பொருளாதாரத் தடைகள் (Western Economic Sanctions), வர்த்தக வரிகள் (Trade Tariffs) மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலி பாதிப்புகள் (Global Supply-Chain Disruptions) ஆகியவை சர்வதேச அமைப்பில் (International System) புதிய பதற்றங்களை உருவாக்கியுள்ளன.

இந்த சூழலில் SCO நாடுகள் ஈரான் மீதான அமெரிக்கா-இஸ்ரேல் இராணுவ நடவடிக்கைகளுக்கு (US-Israel Military Actions) எதிர்ப்பை வெளிப்படுத்தின. அதே வேளை, மேற்கத்திய ஒருதலைப்பட்ச பொருளாதாரத் தடைகள் (Unilateral Economic Sanctions) குறித்தும் விமர் சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இதனால்SCO, உலக தெற்கின் (Global South)) சில நாடுகளுக்கு மாற்று இராஜதந்திர மேடையாக (Alternative Diplomatic Platform) செயல்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது.

ஈரான் SCO-வில் இணைந்திருப்பது மத்திய கிழக்கு (Middle East) மற்றும் யூரேசியா (Eurasia) இடையிலான புவிசார் அரசியல் தொடர்பை (Geopolitical Linkage) மேலும் வலுப்படுத்தியுள்ளது.

ஈரானின் புவியியல் அமைவிடம் (Geographical Position), பாரசீக வளைகுடா (Persian Gulf), மத்திய ஆசியா (Central Asia) மற்றும் தெற்காசியா (South Asia) ஆகிய பகுதிகளுக்கு இடையில் முக்கியமான மூலோபாய இடத்தை (Strategic Location) வழங்குகிறது.

ஈரான் போர் காரணமாக எரிசக்தி பாதுகாப்பு (Energy Security), எண்ணெய் வர்த்தகம் (Oil Trade), கடல்சார் பாதுகாப்பு (Maritime Security) மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் (Global Supply Chains) மீண்டும் சர்வதேச அரசியலின் மையப் பிரச்சினைகளாக மாறியுள்ளன. குறிப்பாக ஹோர்முஸ் நீரிணை (Strait of Hormuz) தொடர்பான நிலைமை உலகளாவிய எரிசக்தி சந்தைக்கு (Global Energy Market) நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ரஸ்யா-உக்ரைன் போர் SCO-வின் புவிசார் அரசியல் முக்கியத்துவத்தை மேலும் அதிகரித்துள்ளது.

ரஸ்யா மீது மேற்கத்திய பொருளாதாரத் தடை கள் (Western Sanctions) அதிகரித்ததன் பின்னர், ரஸ்யா ஆசிய நாடுகளுடன் தனது பொருளாதார மற்றும் இராஜதந்திர உறவுகளை (Economic and Diplomatic Relations) மேலும் வலுப்படுத்தியுள்ளது.

சீனா-ரஸ்யா மூலோபாய கூட்டாண்மை (China-Russia Strategic Partnership), இந்தியா-ரஸ்யா உறவு கள் (India-Russia Relations) மற்றும் மத்திய ஆசிய இணைப்பு (Central Asian Connectivity) ஆகியவை இந்த மாற்றத்தின் முக்கிய கூறுகளாக உள்ளன.

ஆனால் SCO-வை ரஸ்யா மற்றும் சீனா தலைமையிலான மேற்கத்திய எதிர்ப்பு கூட்டணி (Anti-Western Alliance) என்று மட்டும் பார்ப்பது சரியான பகுப்பாய்வு அல்ல. SCO ஒரு நேட்டோ போன்ற முறையான இராணுவக் கூட்டணி (Formal Military Alliance) அல்ல. அதன் உறுப்பினர்களுக்கு இடையே இந்தியா-சீனா மற்றும் இந்தியா-பாகிஸ்தான் போன்ற முக்கியமான மூலோபாய முரண்பாடுகள் (Strategic Differences) தொடர்ந்து உள்ளன.

இன்றைய உலகில் புவிசார் அரசியல் போட்டி (Geopolitical Competition) இராணுவத் துறையில் மட்டும் நடைபெறவில்லை. வர்த்தக வரிகள் (Trade Tariffs), பொருளாதாரத் தடைகள் (Economic Sanctions), தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் (Technology Restrictions), விநியோகச் சங்கிலி மாற்றம் (Supply-Chain Diversification) மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு (Economic Security) ஆகியவை புதிய பொருளாதார அரசியல் கருவிகளாக (Geoeconomic Instruments) மாறியுள்ளன.

அமெரிக்கா-சீனா வர்த்தகப் போட்டி (US-China Trade Competition) மற்றும் அதிகரித்து வரும் உலகளாவிய வர்த்தகப் பாதுகாப்புவாதம் (Global Trade Protectionism), ஆசிய நாடுகளை மாற்று வர்த்தக மற்றும் பொருளாதார கூட்டாண்மைகள் (Alternative Trade and Economic Partnerships) குறித்து சிந்திக்கத் தூண்டுகின்றன. இதனால் SCO-வின் பிராந்திய வர்த்தகம் (Regional Trade), எரிசக்தி ஒத்துழைப்பு (Energy Cooperation), போக்குவரத்து வழித்தடங்கள் (Transport Corridors) மற்றும் உள்ளூர் நாணயப் பயன்பாடு (Local Currency Settlement) போன்ற முயற்சிகள் எதிர்காலத்தில் முக்கியத்துவம் பெறலாம்.

SCO-வின் வளர்ச்சியை கிழக்கு மற்றும் மேற்கு மோதல் (East-West Rivalry) என்ற எளிய கோணத்தில் மட்டும் பார்க்க முடியாது. இந்தியாவின் மூலோபாய சுயாதீனம் (Strategic Autonomy) இதற்கு முக்கியமான உதாரணமாகும். இந்தியா SCO-வில் சீனா, ரஸ்யா உள்ளிட்ட நாடுகளுடன் இணைந்து செயல்படுகிறது. அதே நேரத்தில் அமெரிக்கா , ஐரோப்பிய ஒன்றியம்) மற்றும் இந்தோ-பசிபிக் கூட்டாளிகள் (Indo-Pacific Partners) உடனும் தனது உறவுகளை பேணி வருகிறது.



இதேபோன்ற பல்திசை இராஜதந்திர அணுகுமுறை (Multi-Alignment) மற்ற ஆசிய நாடுகளிலும் காணப்படுகிறது. துருக்கி sco உடனான உறவை மேலும் உயர்த்துவது குறித்து ஆர்வம் காட்டியிருப்பதும் இந்த மாற்றத்திற்கு ஒரு முக்கிய உதாரணமாகும். ஆனால் துருக்கி தனது நேட்டோ உறுப்பினர் நிலை (NATO Membership) மற்றும் மேற்கத்திய உறவுகளை கைவிடுவதில்லை என்று தெளிவுபடுத்தியுள்ளது.

SCO-வின் எதிர்கால முக்கியத்துவம் அதன் உறுப்பினர் எண்ணிக்கையில் மட்டும் இல்லை. பிராந்திய பாதுகாப்பு (Regional Security), எரிசக்தி பாதுகாப்பு (Energy Security), போக்குவரத்து இணைப்பு (Transport Connectivity), பொருளாதார ஒருங்கிணைப்பு (Economic Integration), டிஜிட்டல் ஒத்துழைப்பு (Digital Cooperation) மற்றும் இராஜதந்திர ஒருங்கிணைப்பு (Diplomatic Coordination) ஆகிய துறைகளில் அது எவ்வளவு நடைமுறை ஒத்துழைப்பை (Practical Cooperation) உருவாக்குகிறது என்பதே முக்கியமானது.

2026 பிஷ்கெக் மாநாடு (2026 Bishkek Summit) வெளிப்படுத்தும் முக்கியமான செய்தி, உலகம் ஒரு ஒற்றைமைய உலக ஒழுங்கிலிருந்து (Unipolar World Order) பல்முனை உலக ஒழுங்கை (Multipolar World Order) நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதாகும்.

எனவே SCO-வை மேற்குலகிற்கு மாற்றான அமைப்பு (Alternative to the West) என்று மட்டும் பார்க்காமல், உலகளாவிய அதிகாரப் பகிர்வு (Global Distribution of Power) மாறிவருவதற்கான முக்கியமான புவிசார் அரசியல் குறியீடாக (Geopolitical Indicator) புரிந்துகொள்வதே பொருத்தமானது.

ஆசியாவின் உலகளாவிய செல்வாக்கு (Global Influence) தொடர்ந்து அதிகரிக்கும் நிலையில், ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (Shanghai Cooperation Organisation) எதிர்கால சர்வதேச அரசியலில் (International Politics) முக்கியமான யூரேசிய மூலோபாய மேடையாக (Eurasian Strategic Platform) தொடரும்.

• • •




ஹூதிகள் 36 மணி நேரத்தில் யேமனின் முழு கடற்கரையையும் கைப்பற்றியுள்ளனர், ஒன்றரை நாட்களில் ஹூதிகள் மோச்சாவையும், பின்னர் ஹோடைடாவையும், அதன்பின் பாப் எல்-மண்டேப் முகத்துவாரத்தில் உள்ள தீவுகளையும் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது. இதன் பொருள், உலகின் எண்ணெய் வளத்திற்கான இரண்டாவது முக்கியத் தடைப்புள்ளி இப்போது முழுமையாக அவர்களுக்குச் சொந்தமாகிவிட்டது என்பதாகும்.



கிரேட் ஹனிஷ், ஸ்மால் ஹனிஷ் மற்றும் சுகூர் ஆகிய தீவுகளில் உள்ள பி.எல்.சி (PLC - Popular Liberation Committee) அமைப்பின் எஞ்சிய வீரர்கள், அன்சாரல்லா (ஹூதி) இயக்கத்திடம் சரணடைய ஒப்புக்கொண்டுள்ளனர். சூரிய உதயத்திற்குப் பிறகு, இந்த மூன்று தீவுகளையும் சேர்ந்த சுமார் 2,000 வீரர்கள் ஒப்படைக்கப்படுவார்கள். ஜனாதிபதியின் பொதுமன்னிப்புக்கு இணங்க, இவர்களின் பாதுகாப்பும் பாதுகாப்பான வெளியேற்றமும் உறுதி செய்யப்பட்டுள்ளன. இந்தத் தீவுகள் மீது அன்சாரல்லா இயக்கம் கட்டுப்பாட்டை நிலைநாட்டியுள்ளதை உறுதிப்படுத்தும் வகையிலான காட்சிகள் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யேமன் படைகள் அல்-மவ்ச்சா நகரைக் கைப்பற்றி, விரைவான கடலோர நடவடிக்கையின் போது, அரசாங்கப் படைகள் மற்றும் தேசிய எதிர்ப்பின் படைகள் ஏடன் நோக்கி பின்வாங்கிவிட்டன. ஹூதி படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த குடியேற்றங்களில் கெய்ஸ், அல்-ஹுஜா, அல்-வாசியா, மவ்ச்சா மற்றும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த காலித் இபின் அல்-வலித் இராணுவ தளம் ஆகியவை அடங்கும். செங்கடல் கடற்கரையின் இந்தப் பகுதியில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த முக்கிய துறைமுகமான அல்-மவ்ச்சா (அல்-மாஹ்) கைப்பற்றுவதில் இந்த நடவடிக்கை உச்சக்கட்டத்தை அடைந்தது. இது ஏன் முக்கியமானது? அல்-மவ்ச்சா பாப்-எல்-மண்டேப் ஜலசந்திக்கு வடக்கே சுமார் 60-75 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது, இது உலகின் மிக முக்கியமான கடல் போக்குவரத்து மையங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.



மேற்கு யேமனில் சுமார் 2,600 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்பில் ஹூதிகள் கட்டுப்பாட்டை நிறுவியுள்ளனர். இத்தாக்குதல் Taiz மாகாணத்தின் மேற்குப் பகுதியிலும், Hodeidah மாகாணத்தின் தெற்குப் பகுதியையும் பாதித்துள்ளது, இது பல பகுதிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு வழிவகுத்தது. போரின் சமீபத்திய ஆண்டுகளில் பிராந்திய கட்டுப்பாட்டில் மிக விரைவான மாற்றங்களில் ஒன்றாக இந்த நிகழ்வுகள் விவரிக்கப்படுகின்றன. அதே நாளில் எண்ணெய் விலையும் உயர்ந்தது. பிரெண்ட் விலை கிட்டத் தட்ட ஏழு டாலர்கள் உயர்ந்து 108 டாலரை எட்டியது.

ஏமனில் நடந்த இராணுவத் தாக்குதலால், இரு தரப்பிலும் ஏற்பட்ட உயிரிழப்புகளையும் சேர்த்து, ஏற்கனவே 500-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அத்துடன், சவூதி அரேபியாவிற்கு பில்லியன் கணக்கான டாலர் இழப்புகளும் ஏற்பட்டுள்ளன. தற்போதைய மிகப்பெரிய ஆபத்து, இந்த மோதல் பிராந்திய அளவில் பரவுவதுதான். போரில் புதிய நாடுகளின் ஈடுபாடு குறித்த விவாதங்கள், எண்ணெய் வசதிகள் மீதான ஏவுகணைத் தாக்குதல்கள் அதிகரிப்பு, மற்றும் பாப் அல்-மண்டேப் ஜலசந்தியில் கடுமையான முற்றுகை அச்சுறுத்தல் ஆகியவற்றின் மூலம் இந்த மோதல் விரிவடைவதற்கான தெளிவான அறிகுறிகள் ஏற்கனவே தென்படுகின்றன.

சவூதி அரேபியாவின் நட்பு நாடுகள் ஈரான் மற்றும் ஹூதி கிளர்ச்சியாளர்கள் மீது அழுத்தத்தை அதிகரித்து வருகின்றன. உண்மையில், பாகிஸ்தான் மிகவும் கடுமையான சொல்லாடல்களைக் கையாண்டு வருகிறது. இந்த மோதல் தீவிரமடைதலில் ஒரு திருப்புமுனை என்னவென்றால், இம்முறை சவூதி அரேபியாவே இந்த முன்னெடுப்பைத் தொடங்கியதுதான். அவர்கள் சாடா விமான நிலையத்தின் மீது குண்டுவீசி, இந்த மோதலை தூண்டிவிட்டனர்.



மோதலின் முதல் நாளின் 24 மணி நேரத்திற்கும் குறைவான கால இடைவெளியில், பெரும்பாலும் ஏவுகணைத் தாக்குதல்களால் 84 இராணுவ வீரர்கள் கொல்லப் பட்டதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன, அதே நேரத்தில் 57 போராளிகள் இழந்ததை ஹூதி வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

சவூதி ஆதரவுப் படைகள் மோச்சாவை நோக்கிப் பின்வாங்கியதைத் தொடர்ந்து, ஹேஸ், அல்-கவ்கா, அல்-மஃப்ராக் மற்றும் ஜபல் அல்-நார் ஆகிய பகுதிகள் ஹூதி கட்டுப்பாட்டின் கீழ் வந்தன.

சவூதி இராணுவம் மற்றும் அதன் கூலிப்படைகளைச் சேர்ந்த மூன்று முழுமையான படைப்பிரிவுகள், தங்கள் அனைத்து இலகுரக மற்றும் கனரக ஆயுதங்கள் மற்றும் இராணுவ உபகரணங்களுடன் யேமனியப் படைகளிடம் சரணடைந்ததாக 'அன்சார் அல்லாஹ்' இயக்கத்தின் அரசியல் பிரிவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். ஏமனின் 'அன்சார் அல்லாஹ்' (Ansar Allah) குழுவிற்கு எதிராக ரியாத்திற்கு உளவுத் தகவல்கள் மற்றும் குறிப்பிட்ட இலக்கு சார்ந்த உதவிகளை வழங்குவதற்காக, அமெரிக்கா 100 முதல் 200 வரையிலான ராணுவ ஆலோசகர்களை சவுதி அரேபியாவில் பணியமர்த்தியுள்ளதாக சிஎன்என் (CNN) செய்தி வெளியிட்டுள்ளது.

வேல்ஸில் இருந்து **அருஸ்**




அமெரிக்கப் படைகள் 'அன்சார் அல்லாஹ்' குழுவின் மீது நேரடியாகத் தாக்குதல் நடத்தவோ அல்லது வேறு ஏதேனும் செயல்பாட்டு ரீதியான உதவிகளை வழங்கவோ இல்லை என்றும் சிஎன்என் மேலும் குறிப்பிட்டுள்ளது. ஏமனில் ஈரானின் ஐஆர்ஜிசி (IRGC) அமைப்பைச் சேர்ந்த ஏராளமானோர் இருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் கருதுகின்றனர்.

ஆனால் ஹூதிகளுக்கு எதிரான சவூதி அரேபியாவின் ராணுவ நடவடிக்கையில் இணையுமாறு வலியுறுத்தி, சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் அதிபர் ட்ரம்பை இரண்டு முறை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். இருப்பினும், அமெரிக்க அதிபர் அதற்கு மறுப்பு தெரிவித்துவிட்டதாகவும், ஏமன் மோதலில் பங்கேற்கும் எண்ணம் ஏதுமில்லை என்பதை அமெரிக்க நிர்வாகத்தின் பிரதிநிதிகள் வலியுறுத்தியதாகவும் 'ஆக்சியோஸ்' (Axios) செய்தி வெளியிட்டுள்ளது.

வெறும் சில நாட்களிலேயே, 2015 முதல் ஏமனில் சவுதி அரேபியா கட்டமைத்திருந்த அனைத்தையும் அது நடைமுறையில் இழந்துவிட்டது. சுமார் ஒரு வார கால தீவிர தரைவழி நடவடிக்கைகளுக்குப் பிறகு, மேற்கு ஏமனில் சவுதி அரேபியாவும் அதன் கூட்டாளிகளும் பல ஆண்டுகளாக அமைத்து வந்த முன்னணிக் கோடு பெருமளவில் சரிந்து விட்டது. மோச்சா (Mocha) மற்றும் பாப்-எல்-மண்டேப் (Bab el-Mandeb) நீரிணைப்பிற்கான வழித்தடம் உள்ளிட்ட, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த மேற்கு கடற்கரைப் பகுதிகளை அன்சார் அல்லாஹ் [ஹூதி] படைகள் மீண்டும் கைப்பற்றியுள்ளன. ஒரு தசாப்தத்திற்கும் மேலான போரில், சவுதி அரேபியாவாலும் அதன் கூட்டாளிகளாலும் சனா (Sana'a) நகரைக் கைப்பற்றவோ அல்லது அன்சார் அல்லாஹ் படைகளைத் தோற்கடிக்கவோ முடியவில்லை.

ஹோடைடாவிற்கு (Hodeidah) தெற்கே, பாப்-எல்-மண்டேப் நீரிணைப்பை நோக்கிய மேற்கு கடற்கரைப் பகுதிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்ததே அவர்களின் மிக முக்கியமான ராணுவ வெற்றியாக இருந்தது. இப்போது, வெறும் சில நாட்களிலேயே ஹூதிகள் அந்தப் பகுதிகளைப் பெருமளவில் மீண்டும் தங்கள் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்துவிட்டனர். கடற்கரை மற்றும் பாப்-எல்-மண்டேப் நீரிணைப்பிற்கான கட்டுப்பாடு ஆகியவை சவுதி அரேபியாவிற்கு ஒரு முக்கியப் பிரச்சினையாக உள்ளன. இது கடல்வழிப் போக்குவரத்தை, குறிப்பாக சவுதி எண்

**தொடர்ச்சி: பக்கம் 14**

## தளபதி ஷவேந்திர சில்வா ... தொடர்ச்சி...

பாதிக்கப்பட்ட தமிழர்களும் உயிர் பிழைத்த தமிழர்களும் உலகிற்குச் சொல்லிவரும் வரலாறு இதுவல்ல. ஒரு ராணுவ நடவடிக்கையை 'மனிதாபிமான நடவடிக்கை' என்று அழைப்பதன் மூலம், அதில் உயிரிழந்தவர்களின் இருப்பை அந்த வார்த்தை அழித்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது.

தடுப்புக்காவலை 'மறுவாழ்வு' என்று அழைப்பதன் மூலம், சித்திரவதை மற்றும் பாலியல் வன்முறை குறித்த குற்றச்சாட்டுகளை அந்த வார்த்தை அழித்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஆயிரக்கணக்கான மக்களை 'பயங்கரவாதிகள்' என்று முத்திரை குத்துவதன் மூலம், அந்த முத்திரை அவர்களின் மனிதத்தன்மையை அழித்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்து மதகுருமார்களை முன்னிறுத்தி, அதன் மூலம் தமிழர்களின் ஏற்பைப் (acceptance) பெற்றுவிடலாம் என்று நினைக்க முடியாது.

கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் குழந்தைகளைத் தேடிக்கொண்டிருக்கும் தாய்மார்களைப் புறக்கணித்துவிட்டு, 2009-லேயே அனைத்தும் தீர்க்கப்பட்டுவிட்டதாகக் கூற முடியாது.

அதேபோல, ஜெனரல் சவேந்திர சில்வா "எந்தத் தவறும் செய்யவில்லை" என்று அறிவிப்பதன் மூலம், அவரது கட்டளையின் கீழ் இருந்த படைகள் மீதான தீவிரமான குற்றச்சாட்டுகள் மறைந்துவிடும் என்றும் எதிர்பார்க்க முடியாது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை, முள்ளிவாய்க்கால் என்பது ஒரு ராணுவ வெற்றியின் கொண்டாட்டம் அல்ல. அது தமிழின அழிப்பின் உச்சகட்டத்தையும், நீதிக்கான தொடர்ச்சியான கோரிக்கையையும் குறிக்கிறது.

உண்மையை மறுக்கும் போக்கு தொடர்ந்து நீடிப்பதால்தான், தமிழர்களின் சாட்சியங்களையும் நினைவுகளையும் பாதுகாப்பது அவசியமாகிறது. உயிரிழந்தவர்களால் பேச முடியாது. காணாமல் ஆக்கப்பட்ட பலருக்கும் இன்னும் விடை கிடைக்கவில்லை. அதிகாரத்தில் இருப்பவர்கள் கொண்டாடப்பட்டும், பதவி உயர்வு பெற்றும், பாதுகாக்கப்பட்டும் வரும் நிலையில், உயிர் பிழைத்தவர்கள் தங்கள் சாட்சியங்களை பல ஆண்டுகளாகத் தாங்கி நிற்கிறார்கள்.

ஈழத் தமிழர்கள் தங்களை ஒடுக்கியவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டிய கடப்பாடு இல்லை. எங்கள் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை விவரிக்க இலங்கை அரசு பயன்படுத்தும் மொழியை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. தனிப்பட்ட புகைப்படங்களோ அல்லது கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்திப்புகளோ ஒரு முழு இனத்தின் சம்மதத்தை உருவாக்கிவிட முடியாது.

உண்மையான உண்மையும், நீதியும், பொறுப்புக்கூறலும் உறுதி செய்யப்படும் வரை, ராணுவத் தளபதிகளின் பிம்பத்தை மீட்டெடுக்க முயல்பவர்களின் குரல்கள் முன்னிலைப்படுத்தப்படக் கூடாது.

மாறாக, உயிர் பிழைத்தவர்களின் குரல்களே முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் குரல்கள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

தங்கள் குழந்தைகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியக் கோரி பல ஆண்டுகளாகப் போராடி வரும் தமிழ் தாய்மார்களின் குரல்கள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

கொல்லப்பட்டவர்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நினைவுகளைத் தொடர்ந்து பாதுகாத்து வரும் தமிழ் ஈழ மக்களின் குரல்கள் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும்.

*உண்மையை மறுப்பதன் அடிப்படையில் நல்லிணக்கத்தை உருவாக்க முடியாது; தண்டனையிலிருந்து விலக்களிப்பதன் அடிப்படையில் நீதியை நிலைநாட்ட முடியாது; பாதிக்கப்பட்டவர்களும் உயிர் பிழைத்தவர்களும் தொடர்ந்து பதில்களைக் கோரிவரும் நிலையில், தமிழின அழிப்பு வரலாற்றை மாற்றி எழுதவும் முடியாது.

• • •

## விடை தெரியாத... தொடர்ச்சி...

மனித உரிமை மீறல்களுக்கு உண்மையான நீதியையும் பொறுப்புக்கூறலையும் வழங்காத வரை, எந்தவொரு ஆட்சியினாலும் நாட்டில் உண்மையான சமாதானத்தையோ அல்லது சமூக ஒருமைப்பாட்டையோ கட்டியெழுப்ப முடியாது.

தண்டனையிலிருந்து தப்பிக்கும் போக்கு முடிவுக்குக் கொண்டுவரப்படாத வரை, ஜெனிவா அறிக்கைகள் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொடர்ச்சியான ஏமாற்றத்தையே பரிசளித்துக் கொண்டிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக கடந்த 17 ஆண்டுகளாக ஜெனிவாவைக் கையாளல் என்ற பெயரில் பல தரப்புகள் செயற்பட்டிருந்தன. இதில் சில இன்னமும் செயற்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன.

ஆனால், குறித்த தரப்புகளின் செயற்பாடுகளால் ஜெனிவா அறிக்கையில் ஆகக்குறைந்தது இலங்கையில் தேசிய இனப்பிரச்சினையொன்று காணப்படுகின்றது என்ற விடயத்தைக்கூட தக்கவைத்துக்கொள்வதற்கு முடியாது போயிருக்கின்றது.

தற்போதைய பூகோளச் சூழலில் சாட்சியங்களைத் திரட்டும் பொறிமுறை கூட வினைத்திறனுடன் இயங்குவதற்குரிய சூழல்களைக் கொண்டிருக்கவில்லை. இந்தத் தருணத்தில்தான் இலங்கை அரசாங்கமும் அதனை நிராகரிக்கின்றது.

இப்படியொரு தருணத்தில் ஜெனிவாவை எவ்வாறு யதார்த்தமாகக் கையாள முடியும் என்பது பற்றிய மீளாய்வு என்பது அவசியமாகின்றது. இந்த மீளாய்வு மூலம்தான் அடுத்துவரும் ஜெனிவா அமர்வுகள் நீதி தேடும் மக்களுக்கு அர்த்தமானவையாக இருக்க முடியும்.

## சவேந்திர சில்வா போர்க்குற்ற ... தொடர்ச்சி...

பார்க்கும் இலங்கை அரசியல் பார்வையின் பிரதிநிதியாகப் பேசலாம். ஆனால் முள்ளிவாய்க்காலில் தமது உறவுகளை இழந்த குடும்பங்களுக்கும், சரணடைந்தவர்களின் தடயத் தைத் தேடி பதினேழு ஆண்டுகளாகப் போராடும் தாய்மார்களுக்கும் அந்தப் போர் இன்னும் முடிவடையவில்லை. அவர்களுக்கு அது ஒரு வெற்றிப் போர் அல்ல, நடந்தது இனப்படுகொலை. 2009ஆம் ஆண்டின் இறுதிப் போரில் 58ஆவது படைப்பிரிவின் கட்டுப்பாட்டில் என்ன நடந்தது? சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது? பொது மக்கள் மற்றும் மருத்துவமனைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு யார் பொறுப்பு? காணாமல் போனவர்க ளின் தடயம் எங்கே?

இந்தக் கேள்விகளுக்கு நீதிமன்ற விசாரணையின் ஊடாகப் பதில் கிடைக்காத வரையில், சவேந்திர சில்வா மீதான போர்க்குற்றச்சாட்டுகள் உண்மையா இல்லையா என்பது முடிவுக்கு வரப்போவதில்லை. மாறாக, அமெரிக்கா மற்றும் பிரித்தானியாவின் தடைகள், ஐ.நா. ஆவணங்கள், பாதிக்கப்பட்ட தமிழர்களின் சாட்சியங்கள் மற்றும் நீண்டகாலமாக வெளிவந்த சர்வதேச அறிக்கைகள் ஆகியவை, சவேந்திர சில்வா மீது சுமத்தப்பட்டுள்ள போர்க் குற்றச்சாட்டுகள் வெறும் அரசியல் குற்றச்சாட்டுகள் அல்ல என்பதையும் சர்வதேச விசாரணைக்குத் தகுதியான தீவிரமான குற்றச்சாட்டுகள் என்பதையும் உணர்த்துகிறது.

• • •

## 36 மணி நேரத்தில் ... தொடர்ச்சி...

ணெய் கப்பல்களைக் கண்காணிக்கவும் அச்சுறுத்தவும் ஹூதிகளுக்கு இருக்கும் திறனை கணிசமாக அதிகரிக்கிறது. ஏமனில் பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் போருக்கு மத்தியில், இது சவுதி அரேபியாவின் மூலோபாய நிலையை அடிப்படையிலேயே மோசமடையச் செய்யலாம்.

தற்போது புவிசார் அரசியல் சூழல் மிக வேகமாக மாறி வருகிறது. கடல்சார் போக்குவரத்தில் இத்தகைய மிக முக்கியமான ஒரு குறுகிய வழித்தடத்தைக் (choke point) அன்சார் அல்லாஹ் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது, அப்பிராந்தியத்தின் ஒட்டுமொத்தச் சூழலையே மாற்றி அமைத்துள்ளது.

## வரும் எல் நினோ ... தொடர்ச்சி...

எனினும், அடுத்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரை மழைவீழ்ச்சி குறையக்கூடும் என்பதால், கடுமையான நீர்ப்பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## மாகாண சபைத் தேர்தல் ... தொடர்ச்சி...

மாதங்கள் கடந்துள்ளதாகத் தெரிவித்தார்.

அத்துடன், மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவது தொடர்பான விடயங்களை ஆராய்வதே இத்தெரிவுக்குழுவின் நோக்கமே தவிர, தேர்தலைப் பிற்போடுவது அல்ல என்பதால், எதிர்க்கட்சி என்ற ரீதியில் இனிவரும் நாட்களில் இத்தெரிவுக்குழுவில் பங்கேற்பதைத் தவிர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக அவர் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

## பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் ... தொடர்ச்சி...

கார்ப்பரேஷன், யுனைடெட் இன்ஜின் கார்ப்பரேஷன், ஸ்பெர் (Sber), நாட்ஸ் ப்ராஜெக்ட் ஸ்ட்ராய் (Natsproekt-stroy), டிரான்ஸ்மாஷ்ஹோல்டிங் (Transmashholding), ருசால் (RUSAL), ஃபோஸ்அக்ரோ (PhosAgro), மேம்பட்ட தொழில்நுட்பங்களுக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம், A7 மற்றும் ஆர்னெஸ்ட் (Arnest) உள்ளிட்ட அந்நாட்டின் மிகப்பெரிய அரசு நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன.

மாஸ்கோ, தாதர்ஸ்தான், கிராஸ்னோடர் கிராய் மற்றும் செல்லியாபின்ஸ்க் பிராந்தியம் ஆகியவற்றின் பிராந்தியக் குழுக்களின் அரங்குகள் மற்றும் ரஷ்ய ஏற்றுமதி மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வணிகக் குழுவில் பங்கேற்கும் நிறுவனங்களும் இந்தக் கண்காட்சியின் ஒரு பகுதியாக உள்ளன. ரஷ்யாவின் பாரம்பரிய நாட்டுப்புறக் கலைகள் மற்றும் கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்தும் தனி அரங்கு ஒன்றை 'ரஷ்ய தேசிய மையம்' அமைத்துள்ளது.

இந்தியப் பிரிவில் உலோகம், சுரங்கம், டிஜிட்டல் தொழில்நுட்பம், போக்குவரத்துப் பொறியியல், ஜவுளி, எரிசக்தி மற்றும் எண்ணெய் மற்றும் எரிவாயு போன்ற துறைகளைச் சேர்ந்த முக்கிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் இடம்பெற்றுள்ளன.

## 38 ஆண்டுகளுக்குப் ... தொடர்ச்சி...

பூகோள அரசியல் பொறிக்குள் சிக்க வைத்துவிடக்கூடும் என்றும் எச்சரிக்கப்படுகிறது. அந்த வகையில், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் 38 ஆண்டுகளுக்குப் பின்னரான இலங்கை விஜயமானது, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்பு ஆதிக்கத்தையும் உத்திசார் மேலாதிக்கத்தையும் மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தியுள்ளது எனலாம்.

## இலங்கையில் தடுத்து ... தொடர்ச்சி...

மூழ்கியதில் ஆறு பேர் உயிரிழந்தனர்.

வன்முறை, சித்திரவதை, இடம்பெயர்வு மற்றும் அச்சுறுத்தல் போன்றவற்றை அவர்கள் எதிர்கொண்டுள்ளனர். இந்த அனுபவங்கள், அவர்கள் பாதுகாப்பை நாடி வந்தவர்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. எனினும், அவர்கள் 20 மாதங்களுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், மனிதாபிமான உதவிகளைப் பெறுவதற்கும் மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

எனவே, தடுப்புக்காவலில் உள்ளவர்களை விடுவிக்குமாறும், அதுவரை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், மனித உரிமை அமைப்புகள் மற்றும் ஊடகவியலாளர்கள் அவர்களைச் சந்திக்க அனுமதிக்குமாறும் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம்.

மேலும், பாதுகாப்பை நாடி வருபவர்களை 'சட்டவிரோத குடியேறிகள்' எனக் குறிப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்" என மொஹமட் அன்வர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் வசிக்கும் ரோஹிங்கியாக்கள் உள்ளிட்ட, எந்த நாட்டிலும் நிரந்தர குடியிருப்பு பெற முடியாத அகதிகளுக்கு குடியுரிமை அல்லது நிரந்தர வதிவிட அனுமதி வழங்குவது தொடர்பில் பரிசீலிக்குமாறும் அவர் இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

"மியன்மாரில் ரோஹிங்கியா மக்களுக்கு எதிராக இனப்படுகொலை இடம்பெற்றதாகவும், அது தற்போது தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும், தகவல்களை ஆராயும் ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் குழு தெரிவித்துள்ளது. மேலும், இந்த இனப்படுகொலை முடிவுக்கு வருவதற்கான நியாயமான காரணங்கள் இருப்பதாகவும் அந்தக் குழு குறிப்பிட்டுள்ளது.

நாங்கள் ரோஹிங்கியாக்கள்; நாடற்றவர்களாக உள்ளோம். எனவே, இலங்கையில் வசிக்கும் ரோஹிங்கியாக்கள் உள்ளிட்ட, வேறு எந்த நாட்டிலும் நிரந்தர வதிவிடத்தைப் பெற முடியாத ஏனைய அகதிகளுக்கு குடியுரிமை அல்லது நிரந்தர வதிவிட அனுமதி வழங்குவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

## பத்து ஆண்டுகளில்... தொடர்ச்சி...

"சரியான பாதையில்" அது "தெளிவாக இல்லை" என்றும் அவர் மேலும் கூறினார்.

தற்போதைய செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் குறைந்த ஆபத்தை ஏற்படுத்தினாலும், போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் உருவாக்கப்படுவதற்கு முன்பே, எதிர்கால அமைப்புகள் தங்களை மீண்டும் மீண்டும் மேம்படுத்தத் தொடங்கி, மனிதர்களை விட வேகமாக அதிகத் திறன் கொண்டவையாக மாறக்கூடும் என்ற கவலை நிலவுவதாக ஹூபிங்கர் குறிப்பிட்டார்.

முன்னதாக OpenAI-ல் பணியாற்றிய காக்சன், செவ்வாயன்று ஆந்த்ரோபிக் நிறுவனத்திலிருந்து விலகுவதாக அறிவித்தார். இரு நிறுவனங்களும் "நாகரிகத்தின் அபாயங்களைப்" புறக்கணித்து, "தன்னைத்தானே மேம்படுத்திக்கொள்ளும் மீயறிவியலை நோக்கி நேராகப் பாய்ந்து, நமது உயிர்களுடன் சூதாடுகின்றன" என்று அவர் குற்றம் சாட்டினார்.

"செயற்கை நுண்ணறிவை உருவாக்கும் மக்கள், இந்த தசாப்தத்தின் முடிவில் அது நம் அனைவரையும் கொன்றுவிடும் என்று உண்மையாகவே நம்புகிறார்கள்," என்று அவர் எழுதினார். மேலும், இந்த எச்சரிக்கைகள் "ஒரு சந்தைப்படுத்தல் தந்திரம் அல்ல" என்றும் அவர் வலியுறுத்தினார்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .




இயற்கையின் ஓர் அழகிய தருணம்

## நட்பு

பேர் சொல்லி உறவு இல்லை,
ஆனால் உயிர் கலந்த பிணைவு...
கண்ணீர் வரும் முன்னே புரியும்,
கை கொடுத்து தூக்கி விடும்...

திட்டினாலும் நேசிக்கும்,
கோபித்தாலும் சேர்க்கும்...
உலகம் எதிர்த்தாலும் சேர்ந்து நிற்கும்,
“நானிருக்கேன்” என்று சொல்லி...

சிரிப்பில் பங்கு கேட்கும்,
கஷ்டத்தை பாதி வாங்கும்...
சண்டை வந்து போனாலும்,
மறுநாளே “வா” என்று கூப்பிடும்...

பணமும் இல்லை பதவியும் இல்லை,
ஆனால் நட்பு இருந்தால் வாழ்க்கை
இனிமை...

**சு.திகழினி**
கன்னியா

## சீரற்ற காலநிலையும் மக்களும்

இயற்கையும் மனிதனும் பிரிக்க முடியாத உறவு. ஆனால் இன்று காலநிலை சீர்கெட்டு போய்விட்டது. மழை பெய்ய வேண்டிய காலத்தில் வெயில் அடிக்கிறது. வெயில் வர வேண்டிய நேரத்தில் வெள்ளம் வருகிறது. இந்த சீரற்ற காலநிலை மக்களின் அன்றாட வாழ்கையை முற்றிலும் பாதித்துள்ளது.

காடுகளை வெட்டுதல், தொழிற்சாலை புகை, வாகன புகை, பிளாஸ்டிக் பயன்பாடு ஆகியவற்றால் புவி வெப்பமயமாதல் அதிகரித்துள்ளது. இதனால் பருவநிலை மாறி மழை, வெயில், குளிர் அனைத்தும் காலம் தவறி வருகின்றன. இயற்கையை நாம் அழித்ததன் விளைவை இன்று அனுபவிக்கிறோம்.

சீரற்ற காலநிலையால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. பயிர்கள் விளையாமல் விவசாயிகள் கடனாளி ஆகின்றனர். குடிநீர் பஞ்சம், உணவு பஞ்சம் ஏற்படுகிறது. வெள்ளம், சூறாவளி, வெப்ப அலை போன்றவற்றால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடு இழந்து தவிக்கின்றனர்.

இதற்கு சமீபத்திய எடுத்துக்காட்டு, நேபாளத்தில் ஏற்பட்ட கடும் வெள்ளம். தொடர் மழையின் காரணமாக நதிகள் பெருக்கெடுத்து ஓடின. வீடுகள், பள்ளிகள், சாலைகள் அனைத்தும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. பலர் உயிரிழந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் நிவாரண முகாம்களில் தஞ்சம் அடைந்தனர். இது சீரற்ற காலநிலையின் கோர முகத்தை நமக்கு காட்டியது.

எனவே சீரற்ற காலநிலையை சரி செய்ய மரம் வளர்போம், இயற்கையை பாதுகாப்போம், மாசை குறைப்போம். நாம் இயற்கையை காப்பாற்றினால் தான் எதிர்கால தலைமுறை பாதுகாப்பாக வாழ முடியும். “இயற்கையை காப்போம், வாழ்வை காப்போம்”.

**பி.ஹர்சினி**
பாலையூற்று

## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

ராமு ஒரு கம்பெனியில் வேலை பார்க்கிறான். காலையில் 9 மணிக்கு எழுந்து, கோப்பி குடிச்சுட்டு, தொலைபேசி பார்த்துகிட்டே சாப்பிட்டு ஓடுவான். இரவு 12 மணி வரை கணினி முன்னாடி உட்கார்ந்து வேலை பார்ப்பான். உடற்பயிற்சி, நல்ல சாப்பாடு எதுவுமே கிடையாது. இதனால் அவனுக்கு உடம்பு சோர்வு, தலைவலி, சமீபாட்டு பிரச்சினை எல்லாம் வந்தன.

இதனால் அவன்
ஒருநாள் மருத்துவரிடம் போனான். மருத்துவர் சொன்னார், மிகவும் ஆபத்தான நிலையில் நீங்க இருக்கீர்கள்.
“மருந்தில் மட்டும் ஆரோக்கியம் வராது. உன் வாழ்கை முறையை மாற்ற வேண்டும் என்று. அன்று தான் ராமுவுக்கு “உடம்பு இல்லாமல் பணம் எதுக்கு?” என்று யோசிச்சான்.

அடுத்த நாளில் இருந்து ராமு மாறினான். காலை 5.30-க்கு எழுந்து 30 நிமிடம் நடைபயிற்சி போனான். காலையில் பழங்கள், காய்கறிகள், மதியம் வீட்டு சாப்பாடு சாப்பிட்டான். விரைவுணவு குளிர்பானம் எல்லாத்தையும் தவிர்த்தான். இரவு 10 மணிக்கு தூங்கினான். வாரத்தில் 3 நாள் Yoga பண்ண ஆரம்பித்தான்.

2 மாதத்திலேயே ராமு உடலில் நல்ல மாற்றத்தை உணர்ந்தான். முகத்தில் பொலிவு வந்தது. வேலையில் சுறுசுறுப்பு வந்தது. மருத்துவரிடம் அவன் தன் மாற்றத்தை கூறினான்.

ராமு இப்போது எல்லோரிடமும் சொல்வது ஒன்று தான்”ஆரோக்கியமான உடம்பு இருந்தால் தான் ஆரோக்கியமான வாழ்வு. ஆகவே நாமும் தூக்கம், நல்ல உணவு, தினமும் உடற்பயிற்சி - இதுதான் மருந்தே இல்லாத மருந்து.

**ம. துலக்சனா**
விளாங்குளம்



# தாயகமும் வாழ்வும்


ஸ்ரீ லங்கா சுமித்ரயோ
OPENING


CLUB
MOOLAI
CLUB OF
OF EXCELLE


மௌனத்தை உடைப்போம்:
பரிவுடன் உரையாடுவோம்:
நம்பிக்கையை உருவாக்குவோம்:
தீர்ப்பளிக்காமல் செவிமடுப்போம்:
"ஒன்றிணைந்து ஓர் உயிரைக் காத்திடுவோம்"
0652222990
momhfpbatticaloa@gmail.com